

பிரார்த்தனை

தருவரசு

பிரார்த்தனை

தொகுத்தவர்:

திருவரசு

திருவரசு புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 600 017

முதற் பதிப்பு : மார்ச், 1997

விலை : ரூ. 20.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17.
Printed at : Ravi Raja Offset, Chennai - 14.

பதிப்புரை

பிரார்த்தனை செய்யாத மனிதர்கள் உலகத்தில் கிடையாது. ஏதாவது ஒரு வகையில் - சந்தர்ப்பத்தில் - எதற்காகவாவது ஒருவன் எப்போதாவது பிரார்த்தனை செய்தே ஆகவேண்டும்.

பிரார்த்தனை செய்வதினால் மனக் கவலைகள் மறைகின்றன. குழப்பமுற்ற உள்ளம் தெளிவடைகிறது. தைரியம் பிறக்கிறது. நம்பிக்கை ஏற்படுகிறது. பிரார்த்தனை மனிதனை கடவுளின் அருகாமைக்கு இட்டுச் செல்கிறது.

ஒரு மனிதன் தனக்காக மட்டும் பிரார்த்தனை செய்வதில்லை. உலக மக்களுக்காகவும் - உலக நலனுக்காகவும் கூடப் பிரார்த்தனை செய்கிறான். மகாத்மா காந்தி அடிகள் தினமும் மாலையில் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தியதை இந்த நாடே அறியும். பிரார்த்தனையினால் எதையும் சாதிக்கலாம். சாதித்துக் காட்டியவர் காந்தி அடிகள்.

நல்வாழ்வுக்காக, செல்வம் செழிக்க, கஷ்டங்கள் விலக, நோய்தீர, செய்தொழிலில் வெற்றி பெற இப்படி மனிதன் தன்னுடைய ஒவ்வொரு வினைக்கும் கடவுளிடம் பிரார்த்தனை செய்கிறான், அவர் வரமளிப்பார் என்ற நம்பிக்கையில்.

'மௌனமாய் தியானித்தால் மனங் கலங்கா நிலை பெறும்' என்கிறார் மகாவீரர்.

'ஆபத்துக்களில் அழுந்திய சமயத்தில் உன்னை மனத்தால் நினைக்கிறேன்' என்று துர்க்கா தேவியிடம் கூறுகிறார் ஆதி சங்கரர்.

'பிரார்த்தனை என்றால், பயபக்தியுடன் பகவானை நோக்கி ஏதாவது கேட்பதென்று அர்த்தம். ஆனால் அது மட்டும் போதாது. சர்வ ஜீவராசிகளிடத்தும் நியாயமாக நடந்து கொள்ள நமக்கு புத்தி தரவேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திப்பது மேலான பிரார்த்தனை' என்கிறார் அண்ணல் காந்தி அடிகள்.

'நின்னைச் சில வரங்கள் கேட்பேன். அவை நேரே இன்றெனக்குத் தருவாய்' என்று உரிமையோடு தனக்கே உரித்தான அதிகாரத் தோரணையில் கேட்கிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

'பிரார்த்தனையானது கடவுளுக்குச் செலுத்தும் வணக்கம் மட்டிலும் அல்ல; வணங்கும் மனித ஆன்மா பொங்கி எழும் எழுச்சியுமாகும். மனித உடலுக்கும் மனத்துக்கும் உற்சாகமூட்டுகிறது பிரார்த்தனை. பிரார்த்தனையின் பயனாய் தேகம் பூரிப்படைகிறது. அறிவு தீட்சண்யமுறுகிறது. ஒழுக்கத் துணிவு ஏற்படுகிறது. மனித உறவுகளுக்குப் பின்னே மறைந்து கிடக்கும் உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் ஆழ்ந்த ஞானம் உண்டாகிறது...' இப்படி பிரார்த்தனை பற்றிய பல அபூர்வமான விஷயங்களைக் கூறுகிறார் அலெக்ஸிஸ் காரஸ் என்பவர்.

பகவத் கீதை, வேதங்கள், உபநிஷதங்கள், புராணங்கள் மற்றும் பல்வேறு மத நூல்களும், பிரார்த்தனையின் உயர்வைப் பற்றி ஏகமாகக் கூறுகின்றன. புத்தர், மகாவீரர், இராமகிருஷ்ணர், சங்கரர், இயேசு, டால்ஸ்டாய், விக்டர் ஹியூகோ, லூதர், மூர், சாணக்கியன், கபீர்தாசர், நானக், சைதன்யர், பிளேட்டோ, அரவிந்தர், தாகூர் இன்னும் இன்னும் - எண்ணற்ற அறிஞர்கள், தத்துவஞானிகள், மத போதகர்கள், கற்பனை விற்பன்னர்கள், தலைவர்கள் பிரார்த்தனை பற்றி நிறையவே கூறி இருக்கிறார்கள்.

'கேளுங்கள் தரப்படும் - தட்டுங்கள் திறக்கப்படும்' என்றார் இயேசு பிரான்.

பிரார்த்தனையின் பலனை விளக்க இது ஒன்றே போதுமே!

இந்தச் சிறு நூலில், பல்வேறு உன்னதமான, உயர்ந்த லட்சிய புருஷர்கள், பிரார்த்தனை பற்றிக் கூறியுள்ள வாக்கு மூலங்களைத் தொகுத்து அளித்திருக்கிறார் திருவரசு. இவற்றைப் படித்து, அதன்படி பிரார்த்தனையில் ஈடுபட்டு உங்கள் வாழ்வு வளம் பெறும்படிச் செய்து கொள்ளுங்கள். 'விதியை வெல்லும் ஒரே சக்தி பிரார்த்தனைதான்' என்பதை நினைவில் நிறுத்திக் கொள்வீர்களானால் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் களாவீர்கள்.

சென்னை-17

திருவரசு புத்தக நிலையத்தார்

முன்னுரை

"இன்னது வேண்டும் என்று கேட்பதற்குப் பெயர் பிரார்த்தனை அல்ல. அது ஆன்மாவின் தவிப்பு. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பலவீனங்களைத் தினமும் ஒப்புக் கொள்வதுதான் பிரார்த்தனை. இதயம் ஒன்றாத வெறும் வார்த்தைகள் கூடியதாக இல்லாமல், வார்த்தைகளே இல்லாமல் மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்வது நல்லது." தேசப்பிதா மகாத்மா காந்தி இப்படி 'யங் இந்தியா'வில் ஒருமுறை எழுதினார்.

தியானம் என்பது வேறு... பிரார்த்தனை என்பது வேறு. தியானம் என்பது ஞானநிலை, மோனநிலை, புற உலகத்தைப் பற்றிய சிந்தனைகளே இல்லாமல் இறைவனை மட்டுமே ஒருமுகப்பட்டுச் சிந்திப்பது தியானம். மருத்துவ ரீதியில் 'இறைவன் கூட வேண்டாம் உனக்கு விருப்பமான ஏதாவது ஒரு சிந்தனையில் ஒன்றி ஈடுபடு...' என்கிறார்கள். மன அமைதிக்காக ஆழ்நிலை தியானம் என்றெல்லாம் பழகுகிறார்கள்.

பிரார்த்தனை என்பது முற்றிலும் வேறானது. நமக்கு என்ன வேண்டும் என்பது இறைவனுக்குத் தெரியும். அவனுக்கு எதையும் நாம் நினைவூட்டி "இதைக் கொடு அதைக் கொடு" என்று கேட்கத் தேவையில்லை.

ஆயினும் பிரார்த்தனை செய்கிறோம் 'லோகா சமஸ்தா சுகினோ பவந்து..' உலகத்தில் உள்ளவர்கள் அனைவரும், வேறுபாடின்றி, நலமுடன் வாழ வேண்டும்' என்பது மிகவும் உத்தமமான பிரார்த்தனை.

'பசுவிடம் உள்ள பால், உண்மையில் அதனுடைய உடம்பு முழுவதும் இரத்தத்தில் புஷ்டிருபமாய்ப்

பரவியுள்ளது. என்றாலும் அது சுரக்கும் இடம் மடிதான். அதுபோல ஈசுவரன் எங்கும் நிறைந்திருக்கிறான். என்றாலும் இதயத்தில் நினைக்கும் போது அவன் அங்கு வீற்றிருக்கிறான்' என்பது பகவத் கீதை. அப்படி அவனை நன்றியோடு நினைவுகூர்வதுதான் பிரார்த்தனை.

பரபரப்பான உலகத்தில் தாம் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். உழைப்பில் ஆர்வமும் வேட்கையும் நம்பிக்கையும் உடையவர்களுக்கு இறைவன் அளித்துள்ள காலம் போதுமானதல்ல என்றே தோன்றும். இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் நாற்பத்தெட்டு மணி நேரம் பணியை முடித்தாக வேண்டிய பரபரப்பில் பலர் தவிக்கிறார்கள். 'பொழுது போதவில்லை' என்பதே அவர்களுடைய எண்ணமாக இருக்கும். சோம்பித்திரிகிறவர்கள்தாம் 'பொழுது போகவில்லை' என்பார்கள்.

அறிவியல் வளர்ச்சியின் பலனாய்க் கணிப்பொறி போன்ற சாதனங்கள் வேலை நேரத்தைக் குறைக்க முடியும் என்ற நிலையிலும் அவற்றைப் பயன்படுத்துகிறவர்களும் கூட நேரம் போதவில்லை; போதவில்லை என்கிறார்கள்.

இத்தனை பரபரப்புக்கு இடையே பிரார்த்தனைக்கு என்று எப்படி நேரம் ஒதுக்குவது? அதற்கென ஒரு சிறிதளவேனும் நேரத்தை ஒதுக்கித்தான் ஆகவேண்டும்.

ஒருமுறை சுவாமி சின்மயானந்தா அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதை அப்படியே தருகிறேன்.

"இன்றைய பரபரப்பு மிகுந்த சூழ்நிலையில் கடைப் பிடிக்கக் கூடிய எளிய பிரார்த்தனை முறை ஒன்றைப் பற்றிச் சொல்லலாமா?"

சுவாமி சின்மயானந்தா: நீங்கள் சொல்கிற மாதிரி பரபரப்பான சூழ்நிலை என்பது கிடையவே கிடையாது, அப்படி உண்டாக்கிக் கொள்கிறீர்கள். அப்படியே ஒரு பரபரப்பான சூழ்நிலை இருப்பதாக வைத்துக்

கொள்வோம். உட்கார்ந்து எதையும் அமைதியாகப் படிக்க முடியவில்லை. உங்களின் பிரார்த்தனைகளுக்காக அரைமணி நேரம் கூட ஒதுக்க உங்களுக்கு நேரமில்லை என்றே வைத்துக் கொள்வோம். அப்போது, நீங்கள் எங்கேயெல்லாம் போகிறீர்களோ, அங்கேயெல்லாம் பகவானை நினைக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

"வேலை நிமித்தமாக நீங்கள் வெளியூர்களில் சுற்றுகிறீர்கள். எப்போதுமே குழந்தைகளோடும் மனைவியோடும் வீட்டில் இருக்க உங்களால் முடியவில்லை. இதற்கு ஒரு வழி இருக்கிறது. அவர்களுடைய போட்டோ படத்தைப் பர்ஸில் வைத்து எடுத்துச் செல்வது ஒன்றுதான் அந்தவழி. ஆக, உங்களுடைய பர்ஸ் — ஒருநாளில் பத்து முறையாவது திறக்கப்படும். அப்போதெல்லாம் உங்கள் மனைவியும் குழந்தைகளும் புன்னகைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாமே! இடைவிடாமல் அவர்களை இப்படி நினைவு வைத்துக் கொள்ள உங்களால் முடிகிறது. அதேபோல் உங்கள் இஷ்டதெய்வத்தை நினைக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

"ஆனால் பிரார்த்தனைக்காகப் பத்து அல்லது இருபது நிமிடங்கள் கூடச் செலவிட முடியவில்லை, நேரமில்லை என்பதெல்லாம் மனிதனின் அபத்தமான எண்ணங்கள் தாம்.

"ஏனென்றால் எந்த மனிதனாவது தனக்குச் சாப்பிடக் கூட நேரமில்லை என்று சொல்கிறானா? அல்லது 'பாத்ரூம்' போகவோ, தூங்கவோ நேரமில்லை என்கிறானா? 'நான் ரொம்ப பிஸியாக இருக்கிறேன். என்னால் முடியாது' என்று சொல்கிறானா?

"உடம்பை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள இதையெல்லாம் நீங்கள் செய்துதான் ஆகவேண்டும். அப்போதுதான் மற்ற நேரங்களில் ஆரோக்கியமான முறையில் உங்களால் வேலை செய்யமுடியும்.

"அதேபோல் உங்களை எதிர் நோக்குகிற பிரச்னைகளைச் சந்தித்து வெற்றிகாண, உங்களைத் தயாராக வைத்துக் கொள்ளப் பிரார்த்தனையும் அவசிய மானதாகிறது'' என்று சுவாமி சின்மயானந்தா குறிப்பிட்டுள்ளார்.

பலரும் பலவிதங்களில் பிரார்த்தனை செய்து கொண்டுதான் இருக்கிறோம். கோயில்களுக்குப் போய் சுவாமி சந்நிதியில் நின்று நம்மையும் மீறிக் கண் பனிக்க நிற்பதும் பிரார்த்தனைதான். வீடுகளில், பூஜை அறையில் கூட வேண்டாம் - கண்ணில் படுகிற இஷ்டதெய்வங் களைப் பார்த்துக் கண்களில் ஒற்றிக் கொள்கிறோமே அதுவும் பிரார்த்தனைதான். சிலர் வீட்டை விட்டு வெளியே காலெடுத்துவைக்கிறபோது, வானத்தைப் பார்த்துச் சூரியனை வணங்கி விட்டுத்தான் புறப்படு கிறார்கள். இதுவும் பிரார்த்தனைதான்.

ஒரு சமயம், சின்மயானந்தாவிடம் அந்த நண்பர் கேட்டமாதிரி எளிய பிரார்த்தனைக்கு வழி சொல்லுமாறு, காஞ்சிப் பெரியவர் ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் நானும் கேட்டேன். அவர்களுடைய அருள் உபதேசம் எனக்கு மிகவும் ஆனந்தமளித்தது. இன்றளவும் இனியும் நான் பின்பற்றுகிற, பின்பற்றப்போகிற பிரார்த்தனை முறை அதுதான்.

"காலையில் எழுந்ததும், சூடுபரக்க உள்ளங்கைகளை ஒன்றோடொன்று உரசித் தேய்த்துக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும். உடனே இரண்டு கரகமலங்களையும் தெய்வாம்சமாகப் பாவித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய கர கமலங்களில் லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை மூன்று தேவியரும் இருப்பதாக நினைத்துக் கும்பிட்டுவிட்டு சூரியனை வணங்க வேண்டும். பூமியையும் தொட்டு வணங்க வேண்டும்."

ஜயேந்திரர் உபதேசித்த இந்தப் பிரார்த்தனை முறைக்கு அதிகப்பட்சம் இரண்டு நிமிடங்கள் ஆகலாம். ஆயினும் நாள் முழுவதும் புத்துணர்ச்சியோடு செயல்பட எனக்கு இந்தப் பயிற்சி உதவுகிறது. எழுந்த பின்னர் நீராடி விரிவாகப் பூஜை அறையில் வணங்கி வழிபடுவது என்பது வேறு. கண் விழித்த உடனே செய்யும் பிரார்த்தனை மிகவும் முக்கியமானது. புத்துணர்ச்சி தருவது அது.

அன்றைக்கு சுவாமிகள் எனக்கு உபதேசித்த போது - நம்முடைய கரகமலங்களில் லக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை ஆகிய முப்பெரும் தேவியரும் வீற்றிருப்பதாகப் பாவித்துக் கண்களில் ஒற்றிக் கொள்ளச் சொன்னபோது — அதன் ஆழமான பொருள் சட்டென்று புலப்படவில்லை. செயல் படுத்தத் தொடங்கிய போதுதான் பிரமிப்பு ஏற்பட்டது. தேவியர் வீற்றிருக்கும் கரங்களைத் தவறான வழிகளில் பயன்படுத்தக் கூடாது என்கிற எச்சரிக்கை உணர்வும் ஏற்பட்டது.

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயமாம்
வள்ளல் பிரானுக்கு வாய்கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்கே."

என்கிற திருமந்திரப் பாடல் நினைவில் சுடர்தட்டியது. ஞானிகளின் பார்வையில் கரகமலங்கள் மட்டுமென்ன உடம்பே ஓர் ஆலயம்தானே?

பகவான் சத்யஸாயி பாபாவின் அன்பர்கள் நடத்தும் 'பஜன்' என்னும் நிகழ்ச்சிகள் பிரார்த்தனையின் ஆக்க பூர்வமான வடிவம்தான். ஓங்கார ஜபத்தோடு தொடங்கி பக்திப் பாடல்களை வாய்விட்டுக் கூட்டுப் பிரார்த்தனை யாகப் பாடிக் க்டைசியில் பிரசாதம் பெறுகிற வரையில் - சாதாரண்மாக அந்த ஒரு மணி நேர அனுபவத்தில் கிடைக்கும் ஆனந்தமும் மன அமைதியும் வேறு எதிலும்

கிடைக்காது என்பதை அனுபவித்து உணர்கிறவர்கள் அறிவார்கள். இந்தப் பிரார்த்தனையின் முக்கியமான அம்சமே சர்வசமய நோக்கிலான வழிபாடுதான். ஸத்யஸாயி பஜன் பாடல்களில் இப்படியும் வரும்.

"ஸாயி பாபா தேவா நாம் சத்ய
ஸாயி பாபா தேவா நாம்
தூஹி ப்ரம்மா தூஹி விஷ்ணு
தூஹி நானக் தூஹி யேசு
தூஹி புத்தா தூஜோராஷ்ட்ரா
தூஹி அல்லா தூஹி மகாவீர்
ஸப்ஹை ஸாயி பகவான்!"

என்று எல்லாக் கடவுளர்களையும், மதவேறுபாடின்றி ஸாயி யாகவே தரிசித்து ஆனந்தப் படுகிறார்கள்.

தினமும் காலையில் எழுந்து வேலையைத் தொடங் குவதற்கு முன்னால் ஸ்ரீராம ஜயம் என்றோ, திருச்சிற்றம் பலம் என்றோ எழுதுவது ஒரு நல்ல பழக்கமாக விளங்கி வருகிறது. நகரத்தார் சமூகத்தில் பலர் உ, 'சிவமயம்' என்று தலைப்பில் எழுதிவிட்டே கடிதங்களையும் மற்ற விஷயங்களையும் எழுதத் தொடங்குவார்கள். இவையெல்லாம் பிரார்த்தனைகளின் வேறு வேறான வடிவங்கள்தாம்.

ஒவ்வொரு செயலின்போதும் இறைவனை நினைத்தே செயல்படுவது பெரியவர்கள் காட்டியுள்ள வழி. சமையல் பண்ணும் போது கூடப் பெண்கள் இறைவனைப்பற்றிப் பாடிக் கொண்டு செய்ல்படுவார்கள் என்று முந்தைய நாட்களில் இருந்திருக்கிறது.

முக்கூர் சுவாமிகள் ஒரு சமயம் இப்படிச் சொல்லியிருக்கிறார். "ஓர் இடத்தில் அரைமணி அமர்ந்து 'கோவிந்தா, கேசவா' என்று சொல்ல முடியாமலிருக்கலாம். அதனால் எழுந்திருக்கும்போது 'ஹரிஹரி... ஹரியே நம:'

என்று ஏழுதரம் சொல்லிக் கொண்டே எழுந்திருக்க வேண்டும். வீட்டை விட்டு வெளியே செல்லும் போது 'கேசவாய நம:' என்று சொல்லிக் கொண்டு போக வேண்டும். உணவு உட்கொள்ளும் போது 'கோவிந்தாய நம:' என்று சொல்லிச் சாப்பிட வேண்டும். படுக்கைக்குப் போகும்போது 'மாதவாய நம:' என்று சொல்லவேண்டும். இதுபோல அந்தந்தக் காரியத்துக்கு ஏற்ப பகவந் நாமாவைச் சொல்லிப் பழகிவிட்டால், தனியாக அமர்ந்து சொல்லாமல் போனாலும் பாதகமில்லை."

உருவ வழிபாடு எல்லாவற்றுக்கும் அவசியம் இல்லை. மனமே கோயிலாக விளங்குகிறது! தேசபக்திப் பாடல்தான்! மகாகவி பாரதி சொல்வார் 'வந்தனை செய்து மனதிலிருத்தி வாயுற வாழ்த்தேனோ?' என்று பாரதத் தாயை நினைந்து பாடுகிறார் அவர்.

அப்படி இறையுணர்வும் எந்த நேரத்திலும் நெஞ்சைவிட்டு அகலாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே பெரியவர்கள் பிரார்த்தனை முறையை நமக்கு அருளியிருக்கிறார்கள். இப்படி மனதில் இறைவனைப் பற்றிய எண்ணங்கள் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தால் கெட்ட எண்ணங்களே மனிதனை அணுகமுடியாது. சுயநலம், போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது எல்லாமே பொருளற்ற சொற்களாகி விடும். ஆனால் அப்படி ஒரு தவநிலைமையை அடைவது சாமானியர் களான நமக்குச் சாத்தியமே இல்லை. இருந்தாலும் இயன்ற அளவு நம்மாலும் தெய்வ நினைவோடு இருக்கப் பழகி விட்டால் படிப்படியாக உயர முடியும். பக்தியும் பழகப் பழக நம்மை ஆக்கிரமித்து விடும். சுலபமாகக் காப்பி தேனீர் மாதிரி சிறிய 'போதை'களுக்கு நாம் அடிமையாகி விடுகிறோமே. அப்படி எடுத்துக் கொண்டாலும் தவறில்லை. எப்படியேனும் வழிபாட்டு உணர்வை,

பிரார்த்தனையை நம்முடைய வாழ்க்கை நெறியாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பலநேரங்களில் பகவான் நம்முடைய பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்ப்பதில்லையோ என்று கூட அனுபவக் குறைவான நமக்குத் தோன்றுகிறது. ஆழ்ந்து சிந்தித்தால் நம்முடைய பிரார்த்தனையின் வலிமை போதுமானதாக இல்லை என்பதை உணர முடியும். மனதைச் சுத்தமாக வைத்திருந்து ஆழ்ந்த அன்போடும் நம்பிக்கையோடும் பகவானை நினைத்தால் நியாயமான எல்லாமே நம்மை வந்து அடையும்.

குழந்தை அழுது அடம்பிடித்துப் பெறுகிற தாயன்புக்கு ஒப்பாகப் பிரார்த்தனையைப் பற்றிச் சொல்கிறார் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகாநந்தா என்கிற ஞானி. "நம்முடைய பிரார்த்தனைகள் எல்லாவற்றையும் கேட்ட போதிலும் கடவுள் அவற்றுக்கு எப்போதுமே அருள் பாலிப்பதில்லை. நம்முடைய நிலை, அம்மாவை நினைத்து அழுகின்ற குழந்தையைப் போன்றது. ஒவ்வொரு முறையும், குழந்தையை உடனே வந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தாய் நினைப்பதில்லை. ஏதாவது ஒரு பொம்மையைக் கொடுத்துக் குழந்தையைச் சமாதானப் படுத்த முயல்கிறாள் அந்தத் தாய். ஆனால் அம்மா வந்து தன்னை எடுத்துக் கொள்வதைத் தவிர வேறு எதிலும் திருப்தியடையாத நிலையில் குழந்தை பிடிவாதமாக அழுது அடம்பிடிக்கும். அப்போது தாய் வந்து அந்தக் குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு அமைதிப்படுத்து வாள். கடவுளைப் பூரணமாக அறிந்து கொள்ள விரும்பினால், அம்மா வருகிற வரை அழுது அடம் பிடிக்கிற குறும்புக்காரக் குழந்தையாக நீங்களும் செயல்பட வேண்டும்."

ஸ்ரீ விஷ்ணுசஹஸ்ர நாம ஸ்தோத்திரம் - நாம் எல்லாரும் நன்கு அறிந்தது தான். தினமும் ஒரு முறை

இரண்டு முறை என்று சொல்லி வழிபடுகிறவர்கள் உண்டு. திருவாசகத்தில் 'சிவபுராணம்' ஒன்றை மட்டும் சொன்னாலே மனம் மிகவும் அமைதியடைந்து விசால மடையும். முருகபக்தர்கள் எந்நேரமும் 'முருகா! முருகா! ஓம் சரவணபவா' என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இப்படி அவரவர் இஷ்ட தெய்வங்களைப் பிரார்த்தனை பண்ணிக் கொண்டே இருக்கிறோம். எதுவானாலும் மனம் ஒன்றிச் சொல்லி வழிபடுகிறோமா என்று யோசித்தால் - பெரும்பாலும் சரியான விடை கிடைக்காது. ஏதோ 'மெக்கானிக்கலாக' என்று இயந்திர கதியில் செய்கிற பிரார்த்தனையால் என்ன பயன் விளையும்?

திருவாசகத்தில் சிவபுராணம் சொல்ல ஐந்து நிமிடங்கள்தான் பிடிக்கும். இருபது நிமிடமாவது தேவைப் படுகிற விஷ்ணு சஹஸ்ரநாமத்தில், மிகச் சுருக்கமான முறையில்

> **"ஸ்ரீராம ராமேதி, ரமே ராம மனோரமே,**
> **ஸஹஸ்ர நாம தத்துல்யம், ராமநாம வரானனே"**

என்று சொல்ல அரை நிமிடம் கூட ஆகாது.

ஆனால் இவற்றைச் சொல்கிற சில விநாடிகள், நிமிடங்களில்தான் மனசில் எத்தனை சிந்தனைகள். எண்ணங்கள், கவலைகள் என்று வந்து அலைக்கழிக்கும்? இவற்றை மீறி வழிபடப் பயிற்சி வேண்டும். பழகி விட்டால் மிகவும் இனிமையான அனுபவமாய் பலன்தருகிற மாமருந்து இந்தப் பிரார்த்தனை.

சில இடங்களுக்குச் சென்றாலேபோதும், மனம் அமைதிப்பட்டுப் பிரார்த்தனையில் லயிக்கும். கன்னியா குமரியில் அமைந்துள்ள விவேகானந்தர் பாறையில் உள்ள தியான மண்டபம் அப்படி ஓர் இடம். அங்கே சென்று மிகச்சில நிமிடங்கள் அமர்ந்தாலே போதும். மனம்

தெள்ளிய நீராய்ச் சலனமற்று ஆனந்தமளிக்கும். பாண்டிச்சேரியில் உள்ள ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடம் என்று பல இடங்களில் அமைதியும் ஆனந்தமும் ஏற்படுவதை நான் அனுபவ பூர்வமாக உணர்ந்து மகிழ்கிறவன்.

பண்டைக் காலங்களில், சோழமன்னர்களும் பாண்டிய, பல்லவ மன்னர்களும், விஜயநகரப் பேரரசர் களும், இன்னும் வடபாரதத்தில் வாழ்ந்த மன்னர்களும் பொன்னை வாரிச் செலவிட்டு அமைத்த ஆலயங்கள் இன்று கலைப் பொருட்களாக மட்டுமே சிலரால் மதிக்கப்படுகின்றன. அவற்றை உருவாக்கியவர்களின் எண்ணமெல்லாம் அமைதியான வழிபாடுகளுக்காகத்தான். இன்று ஆரவாரங்களின் இடையேதான் சென்று வழிபட முடிகிறது.

கலியுக வரதனாகத் திகழும் திருப்பதி வேங்கடேசுவரப் பெருமானின் தரிசனத்துக்காகத் திருமலையில் மணிக்கணக்கில் காத்திருந்து, மனம் அயர்ந்து போனால்கூட, 'ஜர-கண்டி'க் கட்டளைகளைச் சமாளித்துப் பெருமாளின் திவ்வியத் திருக்கோலத்துக்கு முன்னால் அரை நிமிடம் கால்நிமிடம் என்று நிற்கிறபோது கிடைக்கிற ஆனந்தத்துக்கு இணை சொல்ல முடிகிறதா?

எந்த மதத்தவரானாலும், இறைவன் ஒருவன்தான். விதம் விதமான வழிகள், விதம் விதமான முறைகள், விதம்விதமான பெயர்கள். ஆனாலும் பிரார்த்தனை என்று வருகிறபோது இறைவன் ஒருவனேதான். 'சர்வதேவ நமஸ்காரம் கேசவம் பிரதிகச்சதி' என்கிறது கீதை.

நாமும், நம்முடைய வேற்றுமைகளை எல்லாம் மறந்து இறைவன் பால் மனம் ஒன்றி வழிபடுவோம். இன்றைய நிலையில், சூழ்ந்து நிற்கும் பல அவலங்கள், வன்முறைகள், சமுதாயக்கேடுகள் இவற்றிலிருந்து எல்லாம் மனிதகுலம்

நாசமடையாமல் காப்பாற்ற அரசாங்கமோ, சட்டங்களோ உதவப் போவதில்லை. பிரார்த்தனை ஒன்று மட்டுமே உய்வுதரக்கூடியது. அது சலனமில்லாத மனத்தில் எழுகிற தூய்மையான பக்தியோடு கூடிய பிரார்த்தனையாக இருக்க வேண்டும்.

அந்த வகையில், இந்த நூலைத் தமிழ்கூறும் நல்லுலகின் அனைவருக்கும் காணிக்கையாக்கி மகிழ் கிறேன். மனம் செம்மைப்பட மகான்களின் மணிமொழி களும் ஆன்றோர்களின் அருள்மொழிகளும் மாபெரும் கவிஞர்களின் தெய்விகப் பாடல்களும் பிரார்த்தனைக்குப் பெரிதும் பயன்படுமெனக்கருதி அவற்றையெல்லாம் படைத்தவர்களை பக்தியோடு வணங்கி இச்சிறு நூலைத் தொகுத்தளித்துள்ளேன். இத்தொகுப்பு நூல் உருவாகக் காரணமே நான் பெரிதும் போற்றும் எனது ஆசான் குமரி மலர் ஆசிரியர் அமரர் ஏ.கே. செட்டியார் அவர்கள்தாம். அவரை நன்றியுணர்வோடு போற்றி வணங்குகிறேன்.

எல்லாரும் இறையருளைப் பிரார்த்தித்து இன்புற இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

திருவரசு

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள்

மக்களின் அன்றாட நல்வாழ்வுக்கு அருளிய

பத்து விதிமுறைகள்

---

1. காலையில் எழுந்தவுடன் கடவுளை இரண்டு நிமிஷங்களாவது நினைத்துப் பிரார்த்தனை செய்.
2. அன்றைய நாள் நல்ல நாளாக இருக்கவேண்டும் என்று இறைவனிடம் வேண்டிக்கொள்.
3. அடுத்துப் புண்ணியநதிகள், கோமாதா, சிரஞ்சீவிகள், சப்த கன்னியர்கள் முதலியவர்களை குறைந்தபட்சம் ஒரு நிமிஷமாவது நினை.
4. வாரத்தில் ஒரு நாளிலாவது - வெள்ளிக்கிழமை யிலாவது அருகிலுள்ள திருக்கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடு.
5. உன் பக்கத்தில் வாழ்பவர்களை நேசி.
6. சாப்பிடும் முன்பு மிருகங்களுக்கோ, பக்ஷிகளுக்கோ ஆகாரம் அளித்துவிட்டுப் பிறகு சாப்பிடு.
7. அன்றாடம் குறைந்தபக்ஷம் ஒரு பைசாவாவது தருமம் செய்.
8. நெற்றியில் திலகம் வைத்துக்கொள்.
9. உறங்கச் செல்லுமுன் அன்றைய நாளில் நீ செய்த நல்லவை கெட்டவைகளை எண்ணிப்பார்.
10. ஆண்டவன் நாமத்தை 108 முறை உச்சரித்து விட்டுப் பின்பு உறங்குக.

ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

பிரார்த்தனை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடிப் போற்றுகின் றேனே —திருமூலர்

உருவாய், அருவாய், உளதாய், இலதாய்
மருவாய், மலராய், மதியாய், ஒளியாய்க்
கருவாய், உயிராய்க், கதியாய், விதியாய்க்
குருவாய், வருவாய், அருள்வாய், குகனே.

—கந்தர் அனுபூதி

உற்றாரை யான் வேண்டேன்
ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந் துறையும்
கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக்
கசிந்துருக வேண்டுவனே. —மாணிக்கவாசகர்

“பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா, அமரர் ஏறே,
ஆயர்தம் கொழுந்தே," என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்

அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

–தொண்டரடிப்பொடி ஆழ்வார்

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்குணைப் பாசாங்குசமும் கரும்பும்
அங்கைச்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
தீங்கில்லையே.

–அபிராமி அந்தாதி

தாள் அணிந்த மதிமுதலாத் தமியனும் அக்
கமலத்தாள் தாங்கி வேனோ
கோள் அணிந்த குழலணிதார் குடைவண்டாப்
புகழ்பாடி மதுவுண் ணேனோ
வாள் அணிந்த வினைப்படைவெல் வலிச்சிங்கம்
ஈன்ற ஒரு மானாய் வந்தாள்
கேள் அணிந்த காவல் நல்லூர் கிளர்புனத்துப்
பசும்புல்லாக் கிடவே னாளோ.

–வீரமாமுனிவர் (கிறிஸ்துவம்)

முன்னாள் பெருமைக்கண் நின்றான்
முடிவெய்து காறும்
நன்றே நினைந்தான் குணமே
மொழிந்தான் தனக்கென்று
ஒன்றானு மில்லான் பிறர்க்கே
உறுதிக் குழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள்
சரணங்க ளன்றே.

–(குண்டலகேசி (பௌத்தம்)

மூவா முதலா உலகம் ஒருமூன்றும் ஏத்தத்
தாவாத இன்பம் தலையாயது தன்னின் எய்தி
ஓவாது நின்ற குணத் தொண்ணிதிச் செல்வனென்ப
தேவாதி தேவன் அவன்சேவடி சேர்துமன்றே.

—சிந்தாமணி (சமணம்)

திருவினும் திருவாய்ப் பொருளினும் பொருளாய்த்
தெளிவினும் தெளிவாய்ச் சிறந்த
மருவினும் மருவாய் அணுவினுக் கணுவாய்
மதித்திடாப் பேரொளி அனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினும் கருவாய்ப் பெருந்தவம் புரிந்த
கருத்தனைப் பொருத்துதல் இருத்தே.

—உமறு புலவர் (இஸ்லாம்)

கடவுளே ஆற்றல் அனைத்துமுடைய ஆண்டவனே, உம்முடைய நட்பைப் பெற்றேன். ஒன்றுக்கும் அஞ்சேன். —ரிக்வேதம்.

தேவா, நாங்கள் புகழ் நிறைந்து வாழ வேண்டும்.

எங்களுக்குக் கிடைக்கும் மதிப்பு, மரியாதைகளுக் கெல்லாம் அடிப்படையில் புனிதம் நிலவ வேண்டும்.

நற்பணிகளின் மூலம் கிடைத்த ஆன்மபலத்தால் எங்கள் ஜீவசக்தி வளர வேண்டும்.

இவற்றின் பயனாக எங்களுடைய வாழ்க்கை ஒளி படைத்த திசைகளைப் போல் பரந்து விரிந்து ஒளிர்ந்து திகழட்டும்.

சுபத்தைத் தரும் அக்கினி தேவதைகளே, என் எண்ணத்தை, என் சொல்லைத் தேன்போல் இனிமை யானதாக்குங்கள்—மக்களின் மத்தியில் நான் பேசுவ

தெல்லாம் தேனைப் போல் இனிமை பயப்பதாக, மதிப்புள்ளதாக அமையுமாறு அருளுங்கள்.

–அதர்வணவேதம்

பகவானே, நீர் சக்திவடிவானீர்; எனக்குச் சக்தியை அளியும்-

நீர் வீர்ய வடிவானீர்; வீர்யத்தை எனக்கு அருளும்.

நீர் பலத்தின் வடிவானீர்; எனக்குப் பலத்தை அருளும்.

நீர் ஆற்றல் வடிவானீர்; எனக்கு ஆற்றலை அருளும்.

நீர் தீர வடிவானீர்; எனக்குத் தீரத்தை அருளும்.

நீர் பொறுமை வடிவானீர்; எனக்குப் பொறுமையை அருளும். –சுக்ல யஜுர் வேதம்

அர்த்தம் தெரியாமல் எந்த மந்திரமானது ஒருவனால் நெட்டுருப் போட்டு லொடலொட வென்று ஒப்பிக்கப் படுகிறதோ, அது தைலஞ் செத்த விறகுக் கட்டைகளுக்குச் சமதையாய் இருக்கிறது. அவற்றில் தீப்பிடிக்கிறதில்லை; ஜ்வலிக்கிறதுமில்லை; வெறும் ஓசைதான் மீதி. –ஸ்மிருதி

கடவுளே! என்னைப் பொய்யிலிருந்து மெய்க்கு அழைத்துச் செல்லும்; இருளிலிருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லும்.

அருள் வள்ளலே! உம்மை அடைய அருளும். என்னகத்தே எழுந்தருளும். அப்போது நான் தூய்மை பெறுவேன். –உபநிஷதம்

தன்னிடமிருந்து தோற்றுவித்த நூலின்கண் சிலந்திப் பூச்சி தன்னை மறைத்துக் கொள்ளும். அது போல் தன்னிடமிருந்து தோற்றுவித்த இயற்கையின் கண் தன்னை மறைத்துள்ள ஏக தெய்வமே, உன்போல் ஊறியிருக்க எங்களுக்கு அனுக்கிரகம் செய்வாயாக.

–ஸ்வேதாஸ்வதரோபநிஷதம்

பசுவினிடம் உள்ள பால், உண்மையில் அதன் சரீரம் முழுவதிலும் ரத்தத்தில் புஷ்டி ரூபமாய்ப் பரவி யுள்ளது. என்றாலும் பால் மடியிலேயே சுரக்கிறது. அதுபோல ஈசுவரன் உலகில் எங்கும் இருக்கிறான். எனினும், இதயத்தில் தியானத்தால் இருக்கிறான்.

–பகவத் கீதை.

அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபித்தவரே,

என்னுடைய அடக்கமின்மையைப் போக்கி அருள்வீராக. மனத்தை அடக்கி அருளும். கானல் நீர் போன்ற வெளிப்பொருளில் நாட்டத்தை நீக்கி அருளும்.

உயிர்களிடம் தயையை வளர்ப்பீராக.

பிறவிக் கடலினின்று கரையேற்றி அருள் புரிதல் வேண்டும்.

–ஷட்பதீ ஸ்தோத்ரம்

கோடி கோடி சங்கைகளான சந்திர சூரியாக் கினிகளுக்குச் சமமான காந்தியை உடையவரும், மூன்றாம் பிறைச் சந்திரனைத் தரித்தவரும், சந்திர சூரியாக்கினிகளைப் போல் ஜொலிக்கின்ற குண்டலங்களை அணிந்திருக்கிறவரும், சோம சூரியாக்கினிகளுக்குச் சமமான வர்ணத்தையுடைய ஈஸ்வரியும், சிரம், புத்தகம், பாசம், அங்குசம் இவற்றை அஸ்தங்களில் தரித்திருக்கிறவளும், காசி நகரத்துக்கு

அதிபதியும், கிருபையாகிய ஆதரணையைத் தருபவளும், லோகமாதாவுமாகிய அன்ன பூர்ணேஸ்வரி, நீ எனக்கு அன்ன பிக்ஷையைத் தந்தருள்வாய்.

–அன்னபூரனி ஸ்தோத்ரம்

தனக்கு உசிதமான கர்மாக்களில் மிகவும் உறுதி யான புத்தியையும், அதைச் செய்வதற்காக உடல் வலிமையையும், நீண்ட ஆயுளையும், மூவுலகிலும் பரவிய புகழையும், பாவ வழியில் வெறுப்பையும், சத் கதைகளைக் கேட்பதையும், எப்பொழுதும் கொடுத்து, கருணைக் கடலான சாரதா தேவி, அறிவையும் தூய்மையான புத்தியையும் எனக்கு அருள வேண்டும்.

–பக்திஸுதா தரங்கிணி

ஈசரே, நீர் எல்லாவற்றிலும் உறைகிறீர். நீரே யாவும்; எல்லா வடிவங்களும் உம்முடையனவே. அனைத்தும் உம்மிடமிருந்து உண்டாகின்றன. நீர் அனைத்துக்கும் ஆன்மா ஆகிறீர். உமக்கு எமது வணக்கம்.

சர்வேஸ்வரா, எனது நெஞ்சில் உள்ள நினைவுகள் அனைத்தையும் அறிகின்ற உம்மிடம் யான் யாது கூறப் போகிறேன்?

அனைத்துயிர்க்கும் ஆன்மனாயும், படைப்பு முழுவதற்கும் ஈசனாயும், அனைத்துப் பொருள் களுக்கும் ஆதியாயும் இருக்கிறீர். எல்லாமான நீர் எல்லாருடைய ஆசைகளையும் அறிவீரன்றோ?

–விஷ்ணு புராணம்

என் உடல் தூயதாகுக. பரஞ்சோதியாக என்னை உணர்வேனாக.

என் மனம் தூயதாகுக. யான் அழுக்கும் பாவமும் நீங்கியவனாகுக. என் ஆன்மா தூயதாகுக.

–தைத்திரிய ஆரண்யகம்

துன்பம் கண்ணீரைத் துடைக்கும். உன் தரிசனம் துன்பம் வரும்போது கிட்டுவதால், அடிக்கடி துன்பம் வரட்டும் என்பது என் பிரார்த்தனை. –மகாபாரதம்

பொறுமைதான் பெரிய பிரார்த்தனை. –புத்தர்

தியானத்தின் மூலம் சிந்தையைத் தூய்மை செய்து கொள்பவன், துன்பக் கடலைக் கடக்கும் கப்பலாவான்.

மௌனமாய்த் தியானித்தால் மனம் கலங்கா நிலை பெறும். –மகாவீரர்

பெருந்தகையே, கூடல சங்கம தேவா, தாங்கள் இறங்கி வந்து, தங்கள் கைகளால் என்னைத் தூக்கி நிறுத்துங்கள்.

ஏனெனில், சேற்றில் அகப்பட்ட மேய்ச்சல் மிருகங்கள் தப்பிக் கொள்ள தங்கள் கால்களை உதைத்துக் கொள்கின்றன. ஆனால், அவை இன்னும் சேற்றில் ஆழமாகத்தான் சிக்கிக் கொள்கின்றன.

அதே நிலையில் தான் நானும் இருக்கின்றேன். உமக்குச் சொந்தமானதும், வேறு துணையற்றதுமான மிருகமாகிய என்னை ஆதரிப்பீராக.

நிலத்துக்குச் சொந்தக்காரன் வழி தவறி வந்து மேயும் மிருகம் என்று, என்னை அடித்து, உங்களுடைய தூய்மையான நாமத்தைப் பாதிப்பதற்கு முன்னே என்னைக் காப்பாற்றுங்கள். –பசவேசர் (வீரசைவம்)

துர்க்காதேவி, உலகில் எங்கும் என்னைப்போல் பாவம் செய்தவருமில்லை; உம்மைப் போல் பாவத்தைப் போக்கும் சக்தியும் எவ்ருக்குமில்லை.

ஆபத்துக்களில் அழுந்திய சமயத்தில் உம்மை மனத்தால் நினைக்கிறேன். இதைத் துர்க்குணமாகக் கொள்ளாதே. பசி, தாகக் கொடுமையால் வருந்துபவர் தாயாரை நினைப்பது இயற்கைதானே. —ஆதி சங்கரர்

புல்லையும் பார்க்கத் தாழ்மை பூண்டவனாய், மரத்தையும் பார்க்கப் பொறுமை வாய்ந்தவனாய், பிறரிடமிருந்து பெருமையை விரும்பாமல், எல்லாரையும் பெருமைப்படுத்திக் கொண்டு சதா காலமும், ஹரிநாமசங்கீர்த்தனம் செய். —கௌரங்கர்

மாயையின் வலையில் வயப்பட்டு துயரக் கடலில் தவிக்கிறாய். மூழ்கி விட்டதாக எண்ணி ஏங்கு கிறாய். கவலை வேண்டாம். "ராதா, கிருஷ்ணா" என்று கூவி அழையுங்கள். அதுவே நான் வேண்டிக் கேட்கும் பிச்சை.

—சைதன்யர்

தாயே, 'நான் பெரியவன், நான் பிராமணன், அவர்கள் தாழ்ந்தவர், பறையர்' என்பன போன்ற கருத்துக்களையெல்லாம் என்னிடத்து இல்லாது ஒழித்து விடுவாயாக.

ஏனெனில் தாழ்ந்தவர், பறையர் எனப்படும் அவர்களும் பல்வேறு ரூபங்களில் உள்ள நீயேயன்றி வேறு யாருமிலர். —இராமகிருஷ்ணர்

ஆண்டவனுடன் ஒன்றுபடுவதற்கு நமது இதயம் கொண்டுள்ள பேராவலும் அவருடைய ஆசியை

வேண்டுதலுமே பிரார்த்தனை. இதில் மனப்பாங்கு தான் முக்கியமே ஒழிய நாம் சொல்லும் சொற்களல்ல.

உடலை வளர்க்க உணவு வேண்டும்; அப்படியே உயிரை வளர்க்கப் பிரார்த்தனை வேண்டும். நமது பிரார்த்தனை நம் இதய பரிசோதனையாகும். கடவுளின் ஆதரவில்லாவிட்டால் நமக்கு வேறு துணை யில்லை.

நமது தவறுகளுக்காக நாம் வருந்துவதற்கும், இன்றைய நிலையை விட மேலான பரிசுத்த நிலையை அடைய விரும்புவதற்கும் சின்னமாக விளங்குகிறது பிரார்த்தனை.

ஒழுங்கு, தியாக புத்தி, பணிவு, திடசித்தம் ஆகியவை இன்றி உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியாது. இந்த குணங்களை அளிப்பதற்குப் பிரார்த்தனைக்கு உள்ளது போன்ற சக்தி வேறு எதற்கும் கிடையாது.

எதனிடம் பக்தி செலுத்துகிறோமோ, அதைத் தவிர வேறு எதையும் மனத்தால் பார்க்கவோ கேட்கவோ முடியாதபடி, மனத்தின் கண்களையும் காதுகளையும் மூடிக்கொள்வதே உண்மையான தியானமாகும்.

ஆதலால் பிரார்த்தனை சமயத்தில் கண்களை மூடிக் கொள்வது லட்சியத்தினிடத்தில் சிந்தனையை குவித்து வைப்பதற்கான ஓர் உதவியாகும்.

பிரார்த்தனையென்றால், பயபக்தியுடன் பகவானை நோக்கி ஏதாவது கேட்பதென்று அர்த்தம். ஆனால், பக்தியோடு கூடிய எந்தக் காரியத்துக்கும் அப் பெயர் சாதாரணமாக உபயோகப்படுத்தப்படுகிறது.

சர்வ ஜீவராசிகளிடத்தும் நியாயமாக நடந்து கொள்ள நமக்குப் புத்தி தரவேண்டுமென்று தெய்வத்தைப் பிரார்த்திப்பதுதான் மேலான பிரார்த்தனை.

—காந்தியடிகள்

நின்னைச் சிலவரங்கள் கேட்பேன்—அவை
நேரே இன்றெனக்குத் தருவாய்—என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள்—இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும்—இனி
என்னைப் புதிய வுயிராக்கி—எனக்
கேதுங் கவலையறச் செய்து—மதி
தன்னை மிகத்தெளிவு செய்து—என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.

தோளை வலிவுடைய தாக்கி—உடற்
சோர்வும் பிணிபலவும் போக்கி—அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும்—கட்டு
மாறா வுடலுறுதி தந்து—சுடர்
நாளைக் கண்டதோர் மலர்போல்—ஒளி
நண்ணித் திகழுமுகந் தந்து—மத
வேளை வெல்லுமுறை கூறித்—தவ
மேன்மை கொடுத்தருளல் வேண்டும்.

கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும்,
நடுவயதிற்குள்ள மனத்திடனும்,
இளைஞனுடைய உற்சாகமும்,
குழந்தையின் இருதயமும்,
தேவர்களே, எனக்கு எப்போதும்
நிலைத்திருக்கும்படி அருள் செய்க.

—மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

புவித்தாயே, நல்ல நோக்கங்களினால் ஏவப்பட்டு, நல்ல ஆட்சியாளர் எம்மீது ஆட்சி புரியட்டும்.

தீயோருக்கு அடங்கி வாழும் நிலை எங்களுக்கு வர வேண்டாம்.

பிறந்த நாள் முதல் பாவம் எதுவும் தன்னைச் சாராமல் தூய்மையுடன் வாழ்வதே மனிதனுக்கு நல்லது.

உணவுப் பொருள்களை மிகுதியாக விளைவிக்கப் பாடுபடுவோமாக.

அண்ணலே, அறநெறி நிற்பதற்கான நல்ல எண்ணங்களை எண்ணும் ஆற்றலை அருள்வீர். அறத்தின் மூலம் உம்முடன் ஐக்கியமாகும் பேற்றை அருள்வீர்.

—ஜராதுஷ்டிரர்.

ஈசனே, நான் உம்மை நரகத்தின் பயத்தினால் ஜபித்தால் என்னை நரகத்தில் வீழ்த்தி விடு.

சுவர்க்கத்திற்கு ஆசைப்பட்டு உம்மை வணங்கியிருப்பேனாகில் சுவர்க்கத்தினின்று என்னை நீக்கி விடு.

உம்மை உமக்காகவே வழிபடுவேனாகில், உம்முடைய பரிபூரணானந்தமான அருளை எனக்குக் கொடுக்க மறுக்காதே.

—ராபியா

அல்லாவே, உடல் நலத்தையும், பத்தினி தர்ம விரதத்தையும், உம்மிடம் நம்பிக்கையையும் நற்குணத்தையும், உம் கட்டளைப்படி நடக்கும் இயல்பையும் எனக்கு அருளும்.

—முகமது நபி

பரம்பொருளே, உமக்கும் எனக்கும் இடையில் "நான்" "நீ" என்ற பேதம் மறையும் நாள் எந்நாளோ?

—பிஸ்தாமி

இறைவனுக்குத் தலைவணங்குவதை நீ கேவலமாக மதிக்கிறாய்.

ஆனால் அது உன்னை மற்றவர்களுக்குத் தலை வணங்குவதிலிருந்து காப்பாற்றும்.

இறை நம்பிக்கை என்னும் சிப்பிக்குள் இருக்கும் முத்துத்தான் தொழுகை.

–இக்பால்

செல்வத்தில் கர்வமும் அலட்சியமும், வறுமையில் கஷ்டமும் கவலையும் இருக்கையில் நீ என்னைப் பற்றி நினைக்கும் காலம் ஏது?

–ஸா அதி

பிறருக்காக பிரார்த்தனை செய்பவருடைய பிரார்த்தனையே கேட்கப்படும்.

–மூஸானாவார்

பிரார்த்தனையின் மூலம் ஆன்மபலம் பெறுதல், பிரார்த்தனையை உள்ளன்புடன் செய்வதைப் பொறுத்ததாகும்.

கடவுளிடம் கூப்பாடு போடவும் வேண்டாம்; கையைத் தட்டவும் வேண்டாம்; மிகச் சிறிய ஒலியும் அவருக்குக் கேட்கும்.

ஏதேனும் ஒரு கடவுளை ஏத்தினாலும் எல்லாக் கடவுளும் ஏற்றுக் கொள்வர்.

உள்ளத்தில் உண்மையுடையார் தோல்வி அறியார். பிரார்த்தனை செய்தும் தோல்வி கண்டால் பிரார்த்தனை உண்மையுடன் செய்யவில்லை என்று உணர்ந்துகொள்.

–ஷிண்டோ

பிரார்த்தனையில் நம்பிக்கையுடன் நீங்கள் கேட்கும் பொருள்கள் எல்லாவற்றையும் பெறுவீர்கள்.

கேளுங்கள், அப்போது உங்களுக்குக் கொடுக்கப் பெறும், தேடுங்கள், அப்போது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்.

–இயேசு கிறிஸ்து

எனது உள்ளம் சிறிது; அதை விசாலமாக்கி வாசம் செய்யத் தகுதியுடையதாக்குக; அது சீர் குலைந்திருக்கிறது; அதை நீர்தாம் சீராக்க வேண்டும். என் உள்ளத்தில் அருவருக்கக் கூடிய குணங்கள் பல உண்டு. அதனை உணர்கிறேன். அவற்றை நீரே துலக்க வல்லவர்; உம்மிடம்தான் முறையிடுவேன். என்னுள் இருக்கும் பாவங்களினின்று என்னை விடுதலை செய். உமது அடிமையைப் பகைவன் தன் வசமாக்காமல் காப்பது உமது கடன்.

–ஸெயிண்ட் அகஸ்தீன்

மாற்ற முடியாதவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தையும், மாற்ற முடிந்தவற்றை மாற்றக் கூடிய மன வலிமையையும் இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய அறிவையும் எனக்குக் கொடுக்கக் கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

இறைவா, என்னை நீ தெய்விக அமைதிக்கான கருவியாக ஆக்கிவிடு. வெறுப்பு இருக்கிற இடத்தில் எல்லாம் நான் அன்பை விதைக்க வேண்டும்.

தீமை நிகழ்கின்ற இடத்தில் மன்னிப்பையும், சந்தேகம் இருக்கிற வட்டாரத்தில் நம்பிக்கையையும், கலக்கம் ஏற்படுகிற இடத்தில் அமைதியையும், இருள் படர்ந்த நிலத்தில் ஒளியையும், துயரம் நிறைந்த பூமியில் மகிழ்ச்சியையும் நான் விதைப்பேனாக.

தெய்விக சாம்ராஜ்யத்தின் தலைவனே, நான் உன்னைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்.

நான் ஆறுதலோடிருக்கிறேன் என்பதன்று; அடுத்தவருக்கு நான் ஆறுதல் தருகிறேனா என்பதே முக்கியமானதாகும்.

நான் உள்ளத்தால் தெரிந்து கொள்ளப்பட்டிருக் கிறேனா என்பதை விட, உலகத்தை நான் தெரிந்து கொண்டேனா என்பதே என்னுடைய பிரச்னை யாகும்.

என்னை அடுத்தவர்கள் நேசிக்கிறார்களா என்பது பற்றிக் கவலையில்லை. அடுத்தவர்களை நான் நேசித்தபடி இருக்க வேண்டும் என்பதே என் கோரிக்கையாகும்.

ஆண்டவனே, கொடுப்பதால்தான் நாம் பெறு கிறோம் என்பதும், மன்னிப்பதால்தான் நாம் மன்னிக்கப்படுகிறோம் என்பதும், இறப்பதால்தான் நாம் புதிதாகப் பிறந்து நிலையான வாழ்வு பெறுகிறோம் என்பதும் நான் அறிந்த தத்துவங்களாக இருப்பதால், என்னுடைய கோரிக்கையை நீ ஏற்றுக் கொள்வாயாக.

இறைவா, நான் உன்னுடைய பிள்ளை.

–ஸெயிண்ட் பிரான்ஸிஸ்

இறைவனே என்னிடம் தாழ்மையை வேண்டு கிறீர். ஆனால் நான் இன்னும் அந்த உயர்ந்த பொருளை எட்டவில்லை.

–டால்ஸ்டாய்

கடவுளிடம் “இது வேண்டும்” என்று குறிப்பிடா மல் பொதுவாக ஆசிகளை வேண்டிப் பிரார்த்திப்பதே

முறை. நமக்கு நன்மை எது என்பதைக் கடவுள் நன்கறிவார். —சாக்ரடீஸ்

அயலார்க்கு நன்மை செய்யும் பொழுதுதான் ஆண்டவனைத் துதிப்பதாகக் கூறமுடியும்.

—ஸவனரோலா

ஒவ்வொரு புனிதமான ஆசையும் கடவுள் பிரார்த்தனையே ஆகும். —ஹூக்கர்

உங்கள் பாவங்களைக் கடவுளிடம் கூறினால் அவர் மன்னிப்பார்; மனிதர்களிடம் கூறினால் அவர்கள் சிரிப்பார்கள். —ஜோஷ் பில்லிங்ஸ்

உன் இதயத்தில் சகிப்புத்தன்மையைப் பயிர் செய். நல்ல கதிர் விளையும் வரை அதை வளர்த்து வா.

பிறர் உனக்குச் செய்த தீமைகளெல்லாம் விரைவில் மறைந்து போகும்படி பிரார்த்தனை செய்.

—ஸ்பர்ஜியன்

பிரார்த்தனை என்பது சொற்களை அடுக்குவது அன்று, மனப்பூர்வமானது; ஆதரவற்ற நிலையை விளக்குவது அன்று, அதை உணர்வது; பேச்சுத்திறன் அன்று, ஆனால் ஆன்மாவின் அந்தரங்க விசுவாசமாகும். —மூர்

சொற்கள் குறைந்துள்ள பிரார்த்தனையே மேலானது. —லூதர்

பிரார்த்தனை என்னும் சிறகைக் கொண்டு, ஆன்மா வானுலகுக்குப் பறந்து செல்லுகின்றது. தியானம்தான் நாம் கடவுளைக் காணும் கண்.

—அம்ப்ரோஸ்

பகவானே, கெட்ட மனிதர்களை நல்லவர்களாகச் செய். நல்லவர்களை மனதுக்கு உகந்தவர்களாகச் செய்.

—ஹெச்.இ. பாஸ்டிக்

நாம் கனவிலும் கருதவொண்ணாத அளவுக்கு மேல் காரியங்களைப் பிரார்த்தனையால் சாதிக்கலாம்.

—டெனிஸன்

இறைவனே, தீய மனிதரிடமிருந்து என்னைக் காப்பாற்று. அத்தீயவன் நான் தான்.

—டி. புருக்ஸ்

கடவுளை நோக்கி நிற்கும் ஆசையே பிரார்த்தனையின் தெளிவான லட்சியமாகும்.

—பிலிப்ஸ் புருக்ஸ்

மனப்பூர்வமாக வணங்கும் போது உனக்குப் புத்துணர்ச்சி உண்டாகும்; பிரார்த்தனையின் உண்மைப் பொருள் விளங்கும்.

—தஸ்தாவ்ஸ்கி

உயிர் வாழும் ஜந்துக்களில் மனிதன் ஒருவன் தான் பிரார்த்தனை செய்கிறான்—அல்லது அவனுக்கு அது அவசியமாகிறது.

—பீட்டர் போமென்

நாம் அறியாமலே நம் எண்ணங்களில் சில கடவுள் பிரார்த்தனையாக இருப்பதுண்டு.

—விக்டர் ஹ்யூகோ

இறைவனே, எமக்கு ஆண்மையுடைய மனிதரைத் தந்தருள்வாயாக. இக்காலத்தில் எமக்கு விசாலமான இதயம், உறுதியான உள்ளம், உண்மையான விசுவாசம், விரும்பி வேலை செய்யும் கை கால்—இவையே தேவை.

பதவி ஆசைக்கு இரையாகாதவர்கள், எவ்வித லஞ்சத்துக்கும் வசமாகாதவர்கள், சொந்த

அபிப்ராயமும் மன உறுதியும் உடையவர்கள். பெருந் தன்மை உடையவர்கள், பொய்யே சொல்லாதவர்கள் இத்தகைய மனிதரை எமக்கு அளிப்பாயாக!

–ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்

பகவானே, மாற்ற முடியாத விஷயங்களைப் பரம அமைதியுடன் பொறுத்துக் கொள்ளத்தக்க பலத்தை எங்களுக்கு அருளும். மாற்றக் கூடிய, மாற்ற வேண்டிய விஷயங்களை மாற்றுவதற்குத் தேவையான தைரியத்தை எங்களுக்கு அருளும். அவை யாவை, இவை யாவை என்று பகுத்துக் கண்டறியத் தக்க விவேகத்தையும் எங்களுக்கு அருளும். **–அட்மிரல் ஹார்ட்**

ஆறுதல் அளிக்கும் தோத்திரப் பாடல்கள் மனத்தைச் சந்தோஷமும், சாந்தியும் உள்ள நிலையில் வைக்கும். **–பேஹில்**

சுயநலத்துடன் கெஞ்சுவது தோத்திரமன்று. வாழ்வின் உண்மைகளை உயர்ந்த நிலையினின்று சிந்திப்பதே தோத்திரம். அது ஒரு கட்டற்ற ஆனந்த ஆன்மா தனக்குத்தானே பேசுதலாகும். அது தெய்வான்மா கடவுள் செயல்களின் நலத்தைப் புகழ் வதாகும்.

சுயநலத்துக்காக அத்தகைய தோத்திரத்தைப் பழகுதல் இழிவு, திருட்டு. கடவுளுடன் மனிதன் ஒன்று பட்டவுடன், பிச்சை கேட்க மாட்டான். அப்போது அவன் எல்லாச் செயல்களையும் கடவுள் வழிபாடாகக் காண்பான்.

பிரார்த்தனை புரியும் எந்த மனிதனும் ஏதேனும் ஒரு புதிய விஷயத்தைக் கற்கத் தவறான். **–எமர்ஸன்**

2

உலகத்தில் எல்லாவற்றிலும் மேலானது பிரார்த்தனை. பிரார்த்தனையே நம்மைக் கடவுள் அருகில் கொண்டு செல்கிறது. நான் செய்த வழிபாடு எல்லாம் உறுதியற்றது; நிலையற்றது. எனினும் அதுவே நான் செய்தவற்றுள் உயர்ந்தது. இதுவே எங்கும் பொருந்துகின்ற உண்மை. அனைத்தையும் தழுவ வல்ல உண்மையில்தான் ஆறுதல் பிறக்கும்.

–ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங்

ம்னிதர் அறிய விரும்பாதது எதையும் கடவுளிடம் கேட்காதே. கடவுள் அறிய நீ விரும்பாதது எதையும் மனிதனிடம் கேட்காதே.

கடவுளிடம் பிரார்த்திக்க வேண்டிய மூன்று வரங்கள்.

நல்ல மனச்சான்று,

மன ஆரோக்கியம்,

தேக ஆரோக்கியம் –ஸெனீகா

பிரார்த்தனையானது கடவுளுக்குச் செலுத்தும் வணக்கம் மட்டிலுமன்று; வணங்கும் மனித ஆன்மா பொங்கி எழும் எழுச்சியுமாகும். ஒரு மனிதனை சிருஷ்டிக்கக்கூடிய பெருஞ் சக்தி அதனால் பிறக்கிறது. உதிரம் சுரந்து உற்சாகமூட்ட உடலுக்குள்ளே அமைந் திருக்கும் சில உறுப்புகளைப் போன்றே, மனித உடலுக்கும், மனத்துக்கும் உற்சாகமூட்டுகிறது பிரார்த்தனை.

பிரார்த்தனையின் பயனாய் தேகம் பூரிப்படை கிறது. அறிவு தீட்சண்யமுறுகிறது. ஒழுக்கத் துணிவு ஏற்படுகிறது. மனித உறவுகளுக்குப் பின்னே மறைந்து

கிடக்கும் உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் ஆழ்ந்த ஞானம் உண்டாகிறது.

மனப்பூர்வமாய் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தால், வாழ்க்கை மிகத் தெளிவாய் மிக மிக ஆழ்ந்து மாறுதல் அடைந்துவிடும். நமது செயல்களிலும் பிரார்த்தனையின் அழிக்க முடியாத முத்திரை தானாகவே பதிந்துவிடும். பிரார்த்தனையால் ஆன்ம வளம் அடைந்தவர்களின் நடத்தையில் ஓர் அமைதியும், முகத்திலும் உடலிலும் ஒரு கம்பீரமும் உண்டாகின்றன. அவர்களது உள்ளத்தினுள்ளே ஒரு ஜ்வாலை எழுகிறது.

பிரார்த்தனையினாலே மனிதன் தன்னைத்தான் அறிந்து கொள்கிறான். தனது சுயநலம், அசட்டு அகங்காரம், அச்சங்கள், பேராசைகள், தவறுகள் ஆகியவற்றை எல்லாம் அவன் கண்டு கொள்கிறான். கடமையிலே பற்றுதலும், அறிவிலே பணிவும் அவனுக்கு உண்டாகின்றன. தெய்விக அருட் பிரகாசத்தை நோக்கி ஆன்மாவின் யாத்திரை இவ்வாறு ஆரம்பமாகி விடுகிறது.

பூமியின் ஆகர்ஷண சக்தி எவ்வளவு உண்மையானதோ, அவ்வளவு உண்மையானதாகும் பிரார்த்தனையின் சக்தியும்.

ஒரு வைத்தியன் என்ற முறையில் பல நோயாளிகளிடம் எனது சகல வைத்தியமும் பலிக்காமல் போன பிறகு, அமைதியான பிரார்த்தனையின் சக்தியால் அவர்கள் நோயும், துயரமும் தீர்ந்து எழுந்ததைக் கண்டிருக்கிறேன்.

இயற்கை விதிகள் என்று சொல்லப் படுகின்றனவே, அந்த விதிகளை எல்லாம் ஜயித்து விட உலகில் உள்ள ஒரே சக்தி பிரார்த்தனைதான்.

பிரார்த்தனையினால் நாடக நிகழ்ச்சி போல ஆச்சரியமாய்த் திடீரென்று அக்காரியங்களைப் புரிந்த சந்தர்ப்பங்களையே "அற்புதங்கள்" என்கிறோம். ஆனால், தங்கள் நித்திய வாழ்வுக்கு ஓயாமல் போஷணையளிக்கத் தக்கது பிரார்த்தனையே என்று கண்டுகொண்ட மக்களின் இதயத்திலே, இடைவிடாது அமைதியாய் அப்போதைக்கப்போது நிகழ்ந்து வருகிறது மற்றோர் அற்புதம்.

பிரார்த்தனை என்பது சம்பிரதாயச் சடங்கான சில வார்த்தைகள் என்றோ, லௌகிகப் பொருள்களை வரம் கேட்கும் ஒரு விண்ணப்பம் என்றோ, பலவீனர்கள் அடைக்கலம் புகும் ஒரு சாதனம் என்றோ அநேகர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி எண்ணுவது பிரார்த்தனையின் மதிப்பைக் குறைத்துப் பேசுவதாகும்.

பிரார்த்தனையை நாம் சரியாகப் புரிந்து கொண்டோமானால், அது மனிதன் பூரண வளர்ச்சி பெறுவதற்கு மிக்க அவசியமான பக்குவச் செயல் என்று காண்போம். மனிதனின் மிக உன்னத உடல் மனச் சக்திகளை இணைத்து இசைக்கும் முடிவான சாதனம் என்று காண்போம். உடல், மனம், ஆவி இந்த மூன்றினதும் இசைகொண்ட பரிபூரண சம்மேளனத்தை, பிரார்த்தனை ஒன்றினால் மட்டுமே நாம் அடைகிறோம். அற்ப உடலுக்கு அசைக்க முடியாத வலிமை இதனால் உண்டாகிறது.

"கேள், நீ கேட்பது கிடைக்கும்" என்ற வார்த்தை களின் உண்மை, மனித அனுபவத்திலே நிரூபணமாகி யிருக்கிறது. இறந்த குழந்தையை உயிர்ப்பிக்கவோ, தேக வேதனையை நீக்கவோ, பிரார்த்தனையால் முடியாமற் போகலாம், உண்மை. ஆனால், பிரார்த்தனையானது ரேடியத்தைப்போல, சுயம்பிரகாசமாய், தனக்குத் தானே சக்தியைப் பொழியும் சக்திக் களஞ்சியமாகும்.

இவ்வளவு சக்தி நிறைந்தவுடன் அது எப்படி நம்மை அரண் செய்கிறது என்பது விஞ்ஞானத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாகும். ஒரு விஷயத்தைத்தான் குறிப்பிட வேண்டும். அதாவது, சகல பிரார்த்தனைகளிலும் ஒரே ஓர் அம்சம் பொதுவாய் இருக்கிறது. அது ஜயசீலர்களின் வெற்றி முழக்கமாய் இருந்தாலும் சரி, ஏழை வனவேடன் ஒருவன் தன் வேட்டையிலே தனக்கு அதிர்ஷ்டம் கிட்டவேண்டும் என்று பணிந்து கெஞ்சும் விண்ணப்ப மாயினும் சரி, ஒரே உண்மையைத்தான் நிரூபிக்கிறது. அது யாதெனில், சர்வ சக்திகளுக்கும் மூலாதாரமான எல்லையற்றதோர் சக்திக் களஞ்சியத்தை நோக்கிப் பிரார்த்தித்து, தங்களுடைய எல்லைக்கு உட்பட்ட சக்தியைப் பெருக்கிக் கொள்ள மனிதர்கள் முயலு கிறார்கள் என்பதுதான் அந்த உண்மை.

நாம் பிரார்த்திக்கும்போது, இவ்வண்டங்களை யெல்லாம் சுழற்றி வரும், அள்ள அள்ளக் குறையாத மூல சக்தியோடு நம்மை நாமே ஒட்டிக் கொள்ளச் செய்கிறோம். அந்தச் சக்திக் களஞ்சியத்திலிருந்து, நமது தேவைகளுக்குக் கொஞ்சம் வழங்கப்பட வேண்டும் என்று வேண்டுகிறோம். அப்படிக் கேட்கும் பொழுதே,

நமது மானிடக் குறைகள் தீர்ந்து பூர்த்தி யாகி, வலிமையும் சீரும் பெற்று எழுகிறோம்.

ஆனால், நமது அற்ப மனோரதங்களை எல்லாம் பூர்த்தி செய்வதற்காக என்றே கடவுளை நாம் அழைக்கலாகாது. வெறும் விண்ணப்பமாக இல்லாமல், ஆண்டவனைப் போலவே அதிக அதிகமாய் ஆகிவிட வேண்டுமென்ற சரணாகதி முறையில் பிரார்த்தனை புரியும் பொழுது, நாம் பிரமாதமான சக்தியைப் பெறுகிறோம். ஈசுவர சாந்நித்தியத்தை அடைவதற்கான பயிற்சி என்றே பிரார்த்தனையை நாம் மதிக்க வேண்டும்.

தன்னைக் கடவுள் நினைவு கூர வேண்டும் என்பதற்காக மட்டில் மனிதன் பிரார்த்தனை புரியவில்லை. தான் கடவுளை நினைவு கூர வேண்டும் என்பதற்காகவும்தான் பிரார்த்திக்கிறான்.

கடவுளை எட்டிப் பிடிப்பதற்கு, கண்ணுக்குப் புலனாகாத ஒரு சக்தியும், சகல பொருள்களையும் சிருஷ்டித்த சிருஷ்டிகளும், பரம ஞான சொரூபியும், சத்தியமும், அழகும், வலிமையும் ஒவ்வொரு மனித னுக்கும் தந்தையும் ரட்சகனுமான அவனுடன் யோகம் புரிய மனிதன் செய்யும் முயற்சியே பிரார்த்தனை.

பிரார்த்தனையின் இந்த லட்சியம் அறிவுக்குப் புலனாகாமல், எப்போதும் உள்ளுக்குள்ளேயே மறைந்து கிடக்கிறது. ஏனெனில், கடவுளை வர்ணிக்க நாம் முயலும் போது, நமது சொல்லும் கருத்தும் தோற்றுவிடுகின்றன.

என்றாலும், கடவுளை நாம் உருக்கமாய்ப் பிரார்த்திக்கும்பொழுது, நமது ஆவியும் உடலுமே மாறி

மேம்படுகின்றன. எவரும் ஒரே ஒரு நிமிஷம் பிரார்த்தித்தாலும் போதும், ஏதோ சொற்ப நற்பலனேனும் கிடைக்கும்.

ஒரு மனிதன் எங்கே வேண்டுமானாலும் பிரார்த்தனை புரியலாம். தெருவிலோ, சாலையிலோ, கச்சேரியிலோ, கடையிலோ, கலாசாலையிலோ அல்லது ஏகாந்தமான தன் அறையிலோ, அல்லது சகலரும் கூடிய கோயில்களிலோ எங்கேயும் பிரார்த்திக்கலாம். இம்மாதிரி நிலையில்தான் நிற்க பிரார்த்தனை வேண்டும் என்றோ, இந்த இடத்தில் தான் புரியலாம் என்றோ, நியமம் எதுவும் கிடையாது.

–அலெக்ஸிஸ் காரெஸ்

தாயைக் குழந்தை பற்றி நிற்பது போல் பகவானைப் பற்றிக் கொண்டு நிற்பதுதான் சரியான வழிபாட்டு முறை. பகவானை நம்பி வாழாதவன் தன்னையும் அறியாத, கடவுளையும் அறியாத; மூடனாவான்.

பிரார்த்தனையின்போது 'ஆ' என்று கதறி கூப்பிட வேண்டியதில்லை. உன் உள்ளத்திலேயே அவன் இருந்து வருகிறான். யாரும் அறியாமல், மெதுவாக, அடக்கமாக, பிரியமாக அவனுடன் பேசலாம்.

ஈசன் சந்நிதியில் மனத்தை நிறுத்துவது ஒன்றையே கவனத்தில் வை. அவனை விட்டு மனம் எங்கும் சென்று விடாமல் பார்த்துக்கொள்.

சஞ்சலமான நம்முடைய மனத்தில் தாமாக எழுகிற எண்ணங்களே நம்முடைய பரம விரோதி, எல்லாவற்றையும் கெடுப்பது அதுவே. நம்முடைய கஷ்டங்கள் ஆரம்பிப்பதும் அதனாலேயே.

ஓர் எண்ணம் தோன்றியவுடன், "அது பயனற்ற ஓர் எண்ணம், நாம் செய்து கொண்டிருக்கும் காரியத்துக்குச் சம்பந்தமில்லாத எண்ணம், நம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளுக்கு அது ஒரு விதத்திலும் உதவாது; மோட்ச சாதன எண்ணம் அன்று" என்று கண்டவுடன் அந்த சமயமே, ஆரம்பத்திலேயே அதை அகற்றி விட்டுப் பகவானோடு தோழமையும் கூட்டுறவும் கொள்வதில் உள்ளத்தைச் செலுத்த வேண்டும். அந்தக் கூட்டுறவே நம்மைக் கடைத் தேற்றும். வேறு எதுவும் பயன் அற்றது.

வழக்கம் பொல்லாதது. அலையும் வழக்கத்திலிருந்து மனத்தைத் திருத்துவது கடினம். நம் விருப்பத்துக்கு மாறாகவே அது இங்கும் அங்கும் ஓடும். தியானம் செய்யும்போது ஆண்டவனை விட்டு விட்டு உலக விஷயங்களை நினைத்துக் கொண்டு திரியும்.

இந்தப் பிழையை பகவானுக்குச் சொல்லி ஒப்புக் கொண்டு, அவன் பாதத்தில் விழுந்து அழுவது ஒன்றே அதற்கு மருந்து.

—ஸெயின்ட் லாரென்ஸ்

கடவுள்

அவர் அவர் தமதமது அறிவுஅறி வகைவகை
அவர் அவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவர் அவர் இறையவர் குறைவுஇலர், இறையவர்
அவர் அவர் விதிவழி அடையநின் றனரே.

—நம்மாழ்வார்

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடி யெல்லாம்

தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
        தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமய கோடிகளெல்லாம்
        தந்தெய்வம் என்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர்வழக்கிடவும் நின்றதெது
        எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி இன்பமாய்
        என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது
        கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலா மோனவுரு வெளியதாகவும்
        கருதி அஞ்சலி செய்குவோம். —தாயுமானவர்

உண்மைப் பொருள் ஒன்று, அதனைப் புலவோர் பலவாறு சொல்லுகிறார்கள்.

நாம் இருளைப் பின்தங்க வைத்துவிட்டு முன்னேறுவோம். எதிரே பரம ஜோதி—பேரொளி—ஜொலித்துக் கொண்டிருக்கிறது. சூரிய தேவதைதான் எல்லா தேவதைகளுக்கும் அதிதேவதை. சூரியன்தான் உத்தம ஜோதி. நாம் அதன் எதிரே இருக்கிறோம். அதை அடையவே முன்னோக்கிப் போகிறோம். —ரிக் வேதம்

பிரம சக்கரத்தை இயக்குவது இயற்கை என்றும், காலம் என்றும் சில சிற்றறிவாளர் கூறுகின்றனர்.

ஆனால் இறைவனுடைய மகிமையே உலகில் இத்தனையுமாய் இருக்கிறது. —ஸ்வேதாஸ்வதர உபநிஷதம்

எதற்குக் கைகால் இல்லையோ, எதற்கு யாதொரு வர்ணமும் இல்லையோ, எது நித்தியமாய் இருக்கிறதோ, எது எங்கும் பரவி நிற்கின்றதோ, அதைத்

தான் எல்லாவற்றிற்கும் மூலம் என்று கூறுவார்கள் பெரியோர்கள். –முண்டகோபநிஷதம்

மனிதப் பிறவியில் பரம்பொருளைக் கண்ணாடியில் காணும் உருவத்தைப்போல் காணலாம்; பித்ரு லோகத்தில் கனவில் காணும் உருவங்களைப்போல் காணலாம்; கந்தர்வ லோகத்தில் நீரில் காணும் உருவம்போல் காணலாம்; பிரம லோகத்தில் வெயிலில் நிழலைப்போல் காணலாம்.

–கடோபநிஷதம்

நெருப்பிலும், நீரிலும் இருப்பவரும், உலகம் முழுவதும் பரவியிருப்பவரும், செடிகளிலும் மரங் களிலும் இருப்பவரும் ஆன பரம்பொருளுக்கு என் வணக்கம். –ஈஸாவஸ்ய உபநிஷதம்

குளிர்ச்சியுமன்று, உஷ்ணமுமன்று, உலர்ந்த தன்று, உலர்ச்சியுமன்று, அத்தன்மையுள்ள பிரமாவாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம்.

வெண்மையன்று, மஞ்சளன்று, சிவப்பன்று, வெள்ளியுமன்று, இரத்தினமுமன்று, பொன்னிறமு மன்று, சந்திர சூரிய வன்னியுமன்று, உதயமும், அஸ்தமனமும் அன்று. அத்தகைய பிரமாவாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம்.

உறைப்பன்று, துவர்ப்பன்று, கைப்பன்று, புளிப் பன்று, மாதுர்யபாக முடையதன்று, எல்லா ரசங்களு மன்று, ஈரமன்று, அக்கரமுமன்று, அதன் கர்த்தாவு மன்று. அத்தன்மையுள்ள பிரமாவாகிய நிரஞ்சனத்துக்கு நமஸ்காரம்.

விருட்சமன்று, வேரன்று, வித்துமன்று, கிளையு மன்று, இலையுமன்று, கணுவுமன்று, பழமுமன்று,

புஷ்பமன்று. அத்தன்மையுள்ள பிரமாவாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம்.

ஆழமன்று, ஆழமின்மையுமன்று, இன்மையுமன்று, ஆசாரமும் சாரமுமன்று, பாபமும் புண்ணியமுமன்று, வெளிப்படையானதும் வெளிப்படையில்லாததுமன்று, அநந்தமும் அந்தமும் அன்று. அத்தன்மையுள்ள பிரமாவாகிய நிரஞ்சனத்திற்கு நமஸ்காரம்.

–பிரம சூத்திரம்

எந்த மனிதனிடம் சத்தியம், சாந்தம், புலனடக்கம், தைரியம், உறுதி, சோம்பலின்மை, வியப்பின்மை, ஆசையின்மை, சமபுத்தி என்ற குணங்கள் உள்ளனவோ, அவனிடம் அகில உலகமும் நிலைபெற்றுவிட்டன. அத்தகைய மனிதனால் கோடி கோடி குலங்கள் கடைத்தேறும். அவன் உடலில் பகவான் கோயில் கொண்டு வருகிறார்.

எந்த மனிதன் தன் பெற்றோருக்குப் பணிவிடை செய்வதையே தன் முதல் கொள்கையாகக் கருதிச் செய்கிறானோ, எந்தப் பெண் மன ஒருமையுடன் தன் கணவனுக்குச் சேவை புரிகிறாளோ, எந்த வைசியன் உண்மையே பேசியும், நாணயம் தவறாமல் நடந்தும் வருகிறானோ, எந்த மனிதன் தன் புலன்களை அடக்கி ஆள்கிறானோ, அவனிடமே பகவான் இருக்கிறார்.

–பத்ம புராணம்

பயப்படுத்துவோனும், பயத்தைப் போக்குவோனும் அவனே.

–விஷ்ணு சகஸ்ரநாமம்

இருதயக் குகையில் உள்ள அவனே பிரமா, அவனே சிவன், அவனே ஹரி, அவனே இந்திரன், அவனே அக்ஷர புருஷன், அவனே பரமேசுவரன்.

–நாராயண ஸூக்தம்

நீர் பரம்பொருள். நீர் பரம ஒளி வடிவாயுள்ளீர். மங்களமானவற்றுள் மிக்க மங்களமானவர். எண்ணில் அடங்கா நற்குணங்களை உடையீர். மந்திரங்களுக்குள் மறைவான உட்பொருளாய் உள்ளீர்.

நீர் அனைத்தையும், தாங்குபவர். எல்லா உயிர் களுக்கும் உயிராய் இருப்பவர். பாதுகாப்பவர், இன்பத் திற்கு உறைவிடமாவீர். நீர் கர்த்தாவாயும் நித்தியராயும், படைப்பவராகவும், பகைவரை நித்தியமாக வெல்பவராகவும் இருக்கிறீர்.

நீர் அன்பர்பால் நன்றியுடையீர். அவருக்கு வரம் அளிப்பீர். நீர் மெய்ப்பொருளாயும், புகழாயும், நல்லார் மீது தாயன்பு கூர்பவராயும், எல்லையற்ற பிறவி யினின்றும் கரையேற்றுபவராயும், அறிய ஒண்ணாத வராயும், எல்லா உயிர்களின் நலத்திலும் ஈடுபட்டவராயும் உள்ளீர். —ஸ்கந்த புராணம்

உலகில் நாம் அனுபவிக்கும் சுகமெல்லாம் பர மானந்தத்தின் ஒரு திவலை. அதன் ஒளியால் உலகம் விளங்குகிறது. அப்பொருளைக் கண்டவருக்கு மற்றதெல்லாம் அதனுள்ளே தோன்றும்.

காரணமாகிய மண்ணைப் பற்றி அறிந்தால் காரியமாகிற மண்குடம், மண்பானை முதலியவை அறியப்படுவது போல; பிரமத்தை அறிந்தால் உலகம் அறியப்பட்டதாகிறது. —ஆதி சங்கரர்

எல்லாவற்றையும் ஆக்குபவனும், எல்லாரையும் தாங்குபவனும், எல்லாவற்றையும் ஆள்பவனும், எல்லாவற்றையும் அழிப்பவனும், ஞானம் முதலிய குணங்களுக்குக் கடல் போன்றவனும், அடியும், நடுவும், முடியும் இல்லாதவனுமாகிய உம் திவ்விய

ரூபத்தை நீர் உபதேசித்த வண்ணமே என் கண்ணெதிரில் காண்கிறேன்.

—இராமாநுஜர்

எவராலும் அவனை ஸ்தாபிக்கவோ, உரு அளிக்கவோ முடியாது. அவன் தானே ஆகியிருப் பவன். தான் தோன்றி நிரஞ்ஜனன். அவனை வழி பட்டவனைப் புகழ், தேடி வந்து அடைகிறது. இத்தகைய குணக் கடலான கடவுளின் புகழைப் பாடுவோம்.

—குரு நானக்

விஷ்ணுவின் (கடவுளின்) திவ்விய தரிசனத்தைக் கற்பனைக் கண்களால் கண்டறியாதவர்களின் கண்கள், மயிலின் தோகையில் உள்ள சலனமற்ற கண்களைப் போன்றவை.

—சைதன்யர்

வேடர் மானைக் காட்டி, மானைப் பிடிப்பது போல, ஈசுவரன் நம்மைப் போல தேகமெடுத்து நம்மை வசப்படுத்துவான்.

ஈசன் அஞ்ஞானிகளுக்குப் பாலில் நெய் போல மறைந்து நின்றாலும், மெய்ஞானிகளுக்கு தயிரில் வெண்ணெய் போல வெளிவந்து நிற்பான்.

—ஞான ரத்னாவளி

வானின்றி மழையுமில்லை, வயலின்றி விளைவு மில்லை,
ஆவின்றிக் கன்றுமில்லை, அரியின்றி ஒளியுமில்லை,
கோனின்றிக் காவலில்லை, குமரர் தாயின்றில்லை,
மேனின்ற கடவுளின்றி, மேதினி யில்லை மாதோ.

—நீதி நூல்

மலரில் மணம் இருப்பதுபோல உன்னகத்தே கடவுள் இருக்கிறார். மான் தன் நாபியில் கஸ்தூரியைப்

பெற்றிருந்தும், புல் மேய அலைவது போல இருக்கிறது மக்கள் வாழ்க்கை.

எள்ளில் எண்ணெய் போன்றும், சக்கி முக்கிக் கல்லில் நெருப்புப் போன்றும் உள்ளத்தில் கடவுள் இருக்கிறார். நீ விழித்தால் வாழ்வு பெறுவாய்.

எல்லாவற்றிலும் ஒன்றையே (பரம்பொருளையே) காண்க. அதைத் தவிர இரண்டாவது உன்னை நெறி தவறச் செய்யும்.

—கபீர்தாசர்

கடவுள் அருள் இல்லை என்றால், ஒரு சிறு காரியத்தைச் செய்வது கூட ஒரு பெரும் கஷ்டமாகி விடும்.

—சாணக்கியன்

மணியை அடிக்கும்போது, அடுத்தடுத்து வரும் அதன் ஒவ்வோர் ஓசையும் தனித்தனி ஒலியாகத் தோன்றும். ஆனால் அடிப்பதை நிறுத்தினால், சிறிது நேரம் வரையில் கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக நின்றொழியும். தெளிவற்ற சப்தமோ இல்லாதது போலத் தோன்றுகிறது.

மணியின் ஓசையைப் போல், கடவுள் உருவமுள்ளவனாயும், உருவமில்லாதவனாயும் இருக்கிறான்.

நிராகாரமான பிரமத்துக்கும் சாதாரண சக்திக்கும் வேற்றுமை ஒன்றுமில்லை. பரமாத்மன் தொழிலொன்றும் செய்யாமலிருப்பதை நினைக்கப் படும்போது சுத்தப்பிரமன் எனப்படும்; தொழில் கொண்டு ஆக்கல், அளித்தல், அழித்தல் செய்வதாகக் கருதப்படுங்காலத்து சக்தி எனப்படும்.

ரூபியான ஈசுவரனும் அரூபியான ஈசுவரனும் வேறானவர்களல்லர்; ரூபத்தோடிருக்கும் அவரே ரூபமில்லாதவராகவுமிருக்கிறார். ஒரு பக்தனுக்கு ஈசுவரன் பல ரூபங்களுடன் தரிசனமளிக்கிறார். அகன்று பரந்திருக்கும் கடற்பரப்பைப் பற்றிச் சற்று யோசித்துப் பார். எந்தத் திக்கில் பார்த்த போதிலும் நிலம் தெரிவதில்லை; அதிகக் குளிரினால் உறைந்த பனிக்கட்டிகளே இங்கும் அங்கும் பார்வையிற் படுகின்றன. இதைப் போலவே, தீவிர பக்தியென்னும் குளிரினால், எங்கும் நிறைந்த எல்லையற்ற பரம் பொருள் உறைந்து, அதாவது உருவமடைந்து, பக்தனுக்குத் தோன்றுகிறார். சூரியன் உதயமான வுடனே, பனிக்கட்டி கரைந்து போவது போலவே, ஞான சூரியன் உதயமானவுடன் ரூபியான கடவுள் மறைந்து அரூபியாகி விடுகின்றார். –இராமகிருஷ்ணர்

வெண்ணையானது பாலெங்கும் வியாபித்திருக் கிறது போலவும், பாலானது பசுவின் உடல் எங்கும் வியாபித்திருக்கிறது போலவும் கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறார். பால் வேண்டுவோர் பசுவைக் கறக்க வேண்டும். அதுபோலவே கடவுள் வேண்டு வோர் அதைத் தமது இதயத்தில் காண வேண்டும்.

முள் இல்லாத ரோஜா இல்லை;

கலப்பில்லாத நன்மை இல்லை;

முழுநலமாய் இருப்பது பரம்பொருள் ஒன்றே.

–இராமதீர்த்தர்

சூழவுள்ள சகல பொருள்களும் சதா மாறியும் சதா இறந்தும் வருகையில், அந்தச் சகல மாறுதல் களினூடேயும் புதைந்து நிலவும் ஒரு ஜீவசக்தி, மிக

மங்கலாக உள்ளத்துக்குப் புலப்படுகிறது. அது மாறுதலற்றது, யாவற்றையும் இயைப்பது, படைப்பது, மாய்ப்பது, மறுபடியும் படைப்பது. அந்த அருட்சக்தி அல்லது ஆன்மாவே கடவுள். புலன்களால் மட்டில் காணும் இதரப் பொருள் எதுவும் நிலைத்திராததால், நிலைத்திருக்க முடியாததால் கடவுள் மட்டிலுமே உண்மை.

இந்தச் சக்தி நன்மையானதா? தீயதா? இது தூய நன்மையே பயப்பது. ஏனெனில், சாவுக்கு நடுவே வாழ்வு நிலைத்திருக்கிறது; பொய்க்கு நடுவே உண்மை நிலைத்திருக்கிறது; இருளுக்கு நடுவே ஒளி நிலைத் திருக்கிறது. ஆதலால் கடவுள் உயிரும், உண்மையும், ஒளியுமாயிருப்பதாய் ஊகிக்கின்றேன். அவர் அன்பு மயம்; உன்னதமான நன்மை வடிவம்.

ஆனால் அறிவை மட்டில் திருப்தி செய்பவ ராயின் அவர் கடவுளாகார். கடவுள் கடவுளாயிருப் பதற்கு நம் இதயத்தையே ஆண்டு, மாற்றுபவராய் இருக்க வேண்டும். தமது பக்தனின் ஒவ்வொரு மிகச் சிறிய காரியத்திலும் அவர் வெளிப்பட வேண்டும். ஐம்புலன்களின் நுகர்ச்சிக்கும் அப்பாற்பட்ட அனுபவமோ பிசகவே பிசகாது. அது புறச்சான்று களால் நிரூபணமாவதில்லை. உள்ளத்தினுள்ளே உறையும் இறைவனை உண்மையில் கண்டு கொண்டோரின் குணாதிசயம் மாறுவதால்தான் அது நிரூபணமாகும். அத்தகையச் சான்று, எல்லாக் காலத்தும், எல்லா நாடுகளிலும் வாழையடி வாழையாய் இடையறாது வந்த மகான்கள், தீர்க்கதரிசிகள் அனுபவங்களிலேயே காணக்

கிடக்கின்றது. அதை ஒருவர் மறுப்பது தம்மையே மறுப்பதற்கு ஒப்பாகும்.

அசைக்க முடியாத நம்பிக்கை வைத்தால்தான், இந்த அனுபவம் சித்திக்கும்-தெய்வ சாந்நித்திய உண்மையைத் தன்னிடத்திலே பரீட்சிக்க விரும்பும் ஒருவன், மிக உறுதியான நம்பிக்கையால்தான். அப்படிச் செய்ய முடியும். நம்பிக்கையையோ, புறச்சான்று எதனாலும் நிரூபிக்க முடியாது.

ஆதலால், தர்ம சக்தியினால்தான் உலகம் ஆளப் படுகிறது என்று நம்புவதே பத்திரமான மார்க்கம். சத்தியத்தையும் அன்பையும் அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமே, மிக உன்னதமான தர்மம் என்று நம்ப வேண்டும். சத்தியத்துக்கும் அன்புக்கும் மாறுபட்ட சான்றுகளை எல்லாம் முன்பின் யோசியாமல் உதறித்தள்ளும் உறுதி வேண்டும். நம்பிக்கையையே உறுதியாய்க் கடைபிடிக்க வேண்டும். இதுதான் பத்திரமானவழி. –காந்தியடிகள்

பூமியில் இருந்து தோன்றிய நீங்கள், உலகில் பல பாகங்களிலும் சென்று உழலக் கூடிய மனிதராக ஆனதும் ஆண்டவனுடைய செயலே ஆகும்.

உங்கள் மனைவிக்கும் உங்களுக்கும் இடையே உறவையும் காதலையும் புகுத்தி, இருவரையும் பிணைத் திருப்பதும் அவன் செயலே.

வானமும் பூமியும் தோன்றியிருக்கின்றன. மொழி களும் வர்ணங்களும் மாறுபட்டு இருக்கின்றன. அவன் விருப்பப்படியேதான் அவை அமைந்திருக்கின்றன.

இரவில் நீங்கள் நித்திரை செய்து இளைப் பாறுவதும், பகலில் பல இடங்களுக்குச் சென்று

அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதும் அவனுடைய செயலே.

நயமும் பயமும் தரக்கூடியவாறு மின்னலை அவன் தோற்றுவிக்கிறான்—மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து வறண்ட பூமியைச் செழிக்கச் செய்கிறான்.

நீங்கள் இறந்து மட்கிப் போன பின்னரும், அவன் உங்களை அழைத்தால், ஒரே நொடியில் நீங்கள் மீண்டும் பிழைத்து எழுவீர்கள்.

படைப்புகளுக்கு மூல காரணம் அவனே. அவை மறைந்த பின்னர் மீண்டும் அவற்றைத் தோன்றச் செய்பவனும் அவனே. இது அவனுக்கு மிக்க எளிது. வானத்திலும் பூமியிலும் அவனுடைய பெருமையே மேலானது.

கடவுளைத் தவிர வேறு கடவுள் இல்லை.

—முகமது நபி

ஒரு பாதுஷாவிடத்தில் மதியூகியான ஒரு மந்திரி இருந்தார். அவர் ஒருநாள் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். அரசரிடம் அவர் கூறிய ஐந்து காரணங்கள்.

தங்களிடம் சேவகம் செய்யும் பொழுது நீங்கள் இருப்பீர்கள்; நான் நிற்பேன். ஆனால் இறை வணக்கத்தில் ஈடுபட்டு இருக்கும்பொழுது என்னை இருந்து வணங்குவ்தற்கும் அருளாளன் அனுமதித் திருப்பார்.

நீங்கள் உணவருந்தும் பொழுது நான் வெறும் பார்வையாளனாகவே இருப்பேன். ஆனால் இப்போது

நான் சேவகம் செய்யும் எஜமானனோ, தான் உணவருந்தும் தேவையில்லாதவனாகவே எனக்கு உணவு அளித்து வருகிறான்.

நீங்கள் தூங்குவீர்கள்; நான் காத்து நிற்பேன்; இப்பொழுது நான் தூங்கும் பொழுது என் நாயகன் காவலில் இருக்கிறான்.

உங்களுக்கு மரணம் நேர்ந்தால் உங்கள் விரோதி களிடமிருந்து என்ன அபாயம் நேருமோ என்று அஞ்சியவனாகவே நான் காலம் கழித்து வந்தேன். இப்பொழுது நான் ஏற்றிருக்கும் எஜமானனோ மரணத்தையே ஆள்பவன்; எந்தப் பகைவனும் எனக்குத் தீங்கு செய்யாதவாறு என்னைக் கண்காணிக்கிறவனாக இருக்கிறான்.

உங்களிடம் நான் ஊழியம் செய்தபொழுது, தப்பித்தவறி நான் ஏதேனும் பிழைகள் புரிந்து விட்டால், நீங்கள் மன்னிக்கமாட்டீர்கள் என்று அஞ்சி வாழ்ந்து வந்தேன். ஆனால் நான் எந்த இறைவனுக்கு இப்பொழுது ஊழியம் செய்கிறேனோ அந்தக் கருணையாளன் என் பிழைகளை எல்லாம் பொறுத்து அருள்வான். —ஹிகாயத்

சந்தைக் கூட்டத்திலும், தொழும் கூட்டத்திலும் கடவுளைத்தான் நான் கண்டேன். பள்ளத்தாக்கிலும், மலை உச்சியிலும் அவரை நான் உணர்ந்தேன்.

என் பெரும் துன்பத்தில் அவரை நான் தேர்ந்தேன். உயர் செல்வத்திலும் மாபெரும் பேற்றிலும் அவர் திகழ்ந்து நின்றார்.

தியானத்திலும், உண்ணா நோன்பிலும் அவர் வீற்றிருந்தார். மெழுகுவர்த்தி போல அவருடைய தீயில்

நான் உருகிப் போய் விட்டேன். எல்லாப் பொருள்களாகவும் பொலிந்து நின்றேன். கடவுளைத் தவிர வேறொன்றையும் நான் கண்டிலனே. –ராபியா

தென்னிந்தியாவில் உள்ள மதுரைக் கோயிலில் எப்பொழுதும் சப்தம் உண்டு; மக்கள் நாள் முழுதும் உச்ச ஸ்தாயில்தான் பேசுகிறார்கள்; கோயிலில் இன்னும் உரக்கப் பேசுகிறார்கள்.

பக்தர்கள் கூட்டம் தாங்க முடியவில்லை. மக்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். சிலர் பக்திப் பாடல்களை ஓதுகிறார்கள். தெரிந்தவர்கள் ஒருவரையொருவர் கூப்பிடுகிறார்கள். க்ஷேமம் விசாரிக்கிறார்கள். உக்கிரமாக வாதாடுகிறார்கள். சில சமயங்களில் சண்டையிடுகிறார்கள். பக்திச் சூழ்நிலை காணவில்லை.

என்றபோதிலும், உடம்பைப் புல்லரிக்கக் கூடிய பலமான தெய்வ சக்தி அங்கு இருப்பதை உணராலம். விவரிக்க முடியாத வகையில் கடவுள் அருகில் இருப்பதாகவும், உயிர்ச்சக்தியுடன் இருப்பதாகவும் தோன்றுகிறது. –சாமர்செட் மாம்

எங்கும் பரவியிருக்கும் காற்றை மாத்திரம் சுவாசித்து வாழ்ந்தால் போதாது.

அக்காற்றைப் போலவே எங்கும் பரந்திருக்கும் சித் பொருளையும் உட்கொண்டு வாழ்வாயாக.

உயிருள்ளவனுக்குச் சுவாசிக்க எங்கும் காற்று இருப்பது போலவே, அறிவுள்ளவன் உட்கொண்டு வாழ இந்தச் சித்பொருளும் சர்வ வியாபகமாக இருக்கிறது. –மார்கஸ் ஔரேலியஸ்

நாம் சுகங்கெட்டு, நோய்பட்டுக் கிடக்கும் போதே ஆண்டவன் நம்மை மிக நெருங்கி நிற்கிறான். சுகமாக இருக்கும்போது நாம் அவனை விட்டு விலகி நிற்கிறோம். நோய்ப்பட்டபோதே அவன் இருப்பது நினைவுக்கு வருகிறது.

—ஸெயின்ட் லாரென்ஸ்

யூதர்க்கென்று ஒரு முக்தியும், கிறிஸ்துவர்க்கு இன்னொரு முக்தியும், கிறிஸ்துவ மதத்தில் நம்பிக் கையற்றவர்களுக்கு மூன்றாவது முக்தியும் இல்லை.

கடவுள் ஒருவரே. மனித இயல்பு ஒன்றே; முக்தி நெறியும் ஒன்றே—ஆன்மாவின் இச்சையைக் கடவுள் மீது திருப்புவதே.

—வில்லியம் லா

ஆதியந்தமற்ற பரமாத்மா ஒருவன் நம் அற்ப அறிவுக்குப் புலனாகக் கூடிய சின்னஞ் சிறு அம்சங் களிலே வெளிப்பட்டுக் காட்சியளிக்கிறான். நான் பணி வுடன் அதைக் கண்டு வியப்புறுகிறேன். அப்படி வெளி யாகும் உன்னத ஞானக் களஞ்சியமே என் கடவுள்.

—ஐன்ஸ்டீன்

இறைவனைப் பற்றி அவனுக்கு பெருமை யில்லாத ஓர் அபிப்ராயம் கொள்வதை விட, அவனைப்பற்றி அபிப்ராயமே கொள்ளாதிருத்தல் மேலானது. ஏனெனில் பிந்தியது வெறும் நம்பிக்கைக் குறைவை மட்டும் காட்டும். முந்தியது அவதூறாகும்.

—புளூடார்ச்

வட்டத்தில் எந்த இடத்திலிருந்தும் மத்திக்குச் செல்ல வழியுண்டு. எவ்வளவு பெரும் தவறானாலும் இறைவனிடம் செல்ல வழியுண்டு.

—ரூக்கர்ட்

குழந்தை இயல்புடையவர்-அதாவது எளிதில் மகிழ்பவர், அன்பு செய்பவர், பிறர்க்கு மகிழ்வூட்டு பவர்-இவர்க்கே கடவுள் ராஜ்யம். –ஆர்.எல். ஸ்டீவன்ஸன்

நேர்மையான உள்ளம் படைத்தவனுக்கு சட்டம் தான் கடவுள்.

முட்டாள்களுக்கு கேளிக்கைதான் கடவுள்.

–பிளேட்டோ

கடவுளை அறிதல்-கடவுளிடம் அன்பு செலுத்துதல் இரண்டிற்கும் இடையிலுள்ள தூரம் எவராலும் இவ்வளவு என்று சொல்லமுடியாது.

–பாஸ்கல்

தனவந்தன், கடவுளைத் தன் பணப்பையில் வைத்திருக்கிறான். ஏழை தன் இதயத்தில் வைத்திருக் கிறான். –டேவிட் ஹ்யூம்

உடலில்லாதது, தோற்றமில்லாதது, வடிவமற்றது, ஜடமில்லாதது, நமது புலன்களுக்கு எட்டாதது — இதுவே தெய்வம். ஹெர்மெஸ்

என்றும் மாறாது, எக்காலத்திலும் எல்லா மக்களையும் கட்டுப்படுத்தும் ஒரு சட்டம் இருக்கும். அந்த சட்டத்தை ஆக்கியவரும், விளக்கிக் கூறுபவரும், அமலில் வைப்பவருமாகிய கடவுள், மக்களை ஆளும் ஒரே அரசராகவும், எஜமானராகவும் இருப்பார்.

–ஸ்டாயிக்ஸ்

நான் நீண்ட நாள் உயிர் வாழ, இந்த உண்மை தான் உறுதியாகிறது. அதாவது மனித வாழ்வை இறைவன் இயக்குகிறான். அவன் பார்வையிலிருந்து தப்பிவிட முடியாது. –பிராங்க்ளின்

சுவர்க்கம் கேட்காமலே கிட்டும்.

கடவுளோ கேட்டால்தான் கிட்டுவார். —லவல்

கடவுள் கருணைக் கடல். ஆனால் அதிலே மொள்ள நாம் உபயோகிக்கும் வாளிதான் சிறியது.
—கிளென்போர்டு

மானிட சமூகத்தை ஒரு குடும்பமாக அமைத்து தாம் தந்தையாயிருந்து, உலகை நம் வீடாக்கிய கடவுள் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளார். —காலெரிட்ஜ்

கடவுள் தம்மை நிரூபிக்க ஒருநாளும் அற்புதங்கள் காட்டுவதில்லை. அவருடைய சாதாரண சிருஷ்டிகளே போதும். —பேக்கன்

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

அவனன்றி ஓரணுவும் அசையாது. —தமிழ்நாடு

கடவுளை நாம் காணமுடியாது. ஆனால் நம் செயல் நல்லதா தீயதா என்பதைக் கடவுள் காண்பார்.
—ஜப்பான்

கடவுளுக்கு அஞ்சு; அவர் கட்டளைகளைக் கடைப்பிடி.

கடவுளே நமக்குச் சரண்; கடவுளே நமக்குப் பலம்.

கடவுள் பயம்தான் ஞானத்தின் ஆரம்பம்.

என்னைக் கொன்றாலும் அவனை நம்புவேன்.
—பாலஸ்தீனம்

தந்தையும் தாயும் அன்பாய் இருப்பர்;

கடவுள் மிக்க அன்புடன் இருப்பார். —டென்மார்க்

கடவுள் வாரந்தோறும் சம்பளம் கொடுப்ப தில்லை. வாழ்க்கை முடிவில் கொடுக்கிறார். –ஹாலந்து

எங்கு அமைதி இருக்கிறதோ அங்கு கடவுள் இருக்கிறார்.

கடவுள் அடிக்கடி நம் வீட்டுக்கு வருகிறார். ஆனால் பெரும்பாலும் வீட்டில் இருப்பதில்லை.

கடவுள் அதிகக் கருணை காட்டுகிறார். கெட்ட வர்களிடம் இன்னும் அதிகமாகக் கருணை காட்டுகிறார்.

–பிரான்ஸ்

ஒவ்வொருவரும் தம் வீட்டில்;

கடவுள் எல்லா வீடுகளிலும். –ஸ்பெயின்

பக்தி

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா–நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.

–பூதத்தாழ்வார்

உடம்பெனும் மனைய கத்துள்
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி
உயிரெ னும்திரி மயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே.

–திருநாவுக்கரசர்

என் துர்ப்புத்தியே; பல பற்றுகளை விட்டொழித்து பிரமம் ஒன்றையே அறிந்து கொள்.

முண்டகோப நிஷதம்

தியானம் திடப்படும் பொழுது, பனிப்படலம், புகை, சூரியன், காற்று, நெருப்பு, மின்மினி, மின்னல், பளிங்கு, சந்திரன் என்னும் இந்த உருவங்கள் புருவ மத்தியில் தோன்றிய பின்னர், யோகத்திலே படிப்படியாக பிரமத்தின் தோற்றம் உண்டாகும்.

–ஸ்வேதாஸ்வதரோப நிஷதம்

சுவையான உணவு படைக்க அன்புள்ள தாய் இருக்க வேண்டும்.

ஒழுக்கமுள்ள நடத்தைக்கு நல்ல நண்பர்கள் இருக்க வேண்டும்.

நல்ல அறிவு வளர சிறந்த ஆசான் வேண்டும்.

இனிமையான இல்வாழ்க்கைக்கு இங்கிதமான மனைவி வேண்டும்.

தூய சிந்தனை பிறக்க, தெய்வபக்தி வேண்டும்.

–உபநிஷதம்

இதயத்தில் இருக்கும் பகைமை எண்ணம் அனைத்தையும் நீக்கிவிட்டு, அறச் செயல்களைச் செய்வதன் மூலம் என்னை வழிபடுவாய்.

தீமை செய்யாமை, பொய்யாமை, நன்மை செய்தல், அருளுடைமை - இவற்றையே சான்றோர் தவச் செயல்கள் என்பர். உடலை வருத்தும் நோன்புகளை அல்ல.

மிகக் கொடிய பாவியும் ஒரு மனப் பாங்குடன் என்னிடம் பக்தி புரிந்தால், அவன் மனத்தின்

உறுதியைக் கருதி அவனை நல்லவன், பெரியவன் என்றே கொள்ளலாம். –பகவத் கீதை

துவிஜர்கள் பரமாத்மாவை அக்கினியால் பூஜிக்கின்றனர். யோகிகள் தங்கள் இதயத்தில் பூஜிக்கின்றனர். முதிர்ச்சி அடையாதவர்கள் உருவங்களில் பூஜிக்கின்றனர். சமதர்சிகள் எங்கும் பூஜிக்கின்றனர்.

–உத்தரகீதை

பணம், பொருள் முதலியவற்றிலும், உடல் முதலியவற்றிலும் தன்னுடையது, பிறருடையது என்று வேற்றுமை பாராட்டாமல் எல்லா உயிர்களிலும் பொருள்களிலும் கடவுள் வீற்றிருப்பதைக் காண்பவனும், எல்லாரையும் சமமாகக் கருதுபவனும், எந்த நிகழ்ச்சி அல்லது முடிவிலும் கோபமோ, பரபரப்போ அடையாமலும் இருப்பவனே தலைசிறந்த பக்தன்.

எவனிடம் சேமிப்பு எதுவுமில்லையோ, எவன் பொருள் இல்லாதவனோ, எவன் இந்திரியங்களை வென்று விட்டவனோ, எவன் சாந்தமாய், சமநோக்குடன் இருந்து கொண்டு தான் கடவுளின் அண்மையில் இருப்பதை ஒவ்வொரு கணமும் உணர்ந்து மகிழ்கிறானோ அவனுக்கு எங்கும் ஓரே இன்பம்தான்.

'எதிலும் விருப்பமின்றி, சாந்தமாய் எவரிடமும் பகையில்லாமல், சமநோக்குடன் இருந்துவரும் மகாத்மாவின் பின்னே, அவருடைய பாதத்தின் தூசி என்மீது விழுந்து நான் உய்யமாட்டேனா என்ற ஆவலில் நான் போய்க்கொண்டே இருக்கிறேன்'' என்கிறார் பகவான்.

எவனொருவன் தனக்கு ஆண்டவனிடமுள்ள பக்தியை உயிர்களிடத்துத் தான் கொள்ளும் அன்பிலே பார்க்கிறானோ, இன்னும் இவையனைத்தும் ஆண்டவன் மீதுள்ள பக்தியில் காண்கிறானோ, அவன் தான் மேன்மையான பக்தன். –பாகவதம்

ஆன்ம சுத்தியாகிய தொழிலைச் செய்யுங்கள். அதில் விழிப்போடு இருங்கள். சிந்தனையோடு இருங்கள். விடுதலையிலே கருத்துச் செலுத்துங்கள்.

–மஹா பரிநிர்வாண ஸூக்தம்

பக்தன் உள்ளும் புறமும் எப்போதும் பரிசுத்த மானவன். அவனுடைய மனம், புத்தி, வாக்கு, செயல் எல்லாம் எப்போதும் பகவானிடம் நிலை பெற்று நிற்பதால், பக்தன் இருக்கும் இடமும், அவனைச் சூழ்ந்த காற்றும் நீரும் கூடப் பரிசுத்தமே.

பக்தனைக் காண்பதும், அவனுடன் வார்த்தை யாடுவதுமே பிறரைச் சுத்தமாக்கும்.

பக்தர்கள் புனிதமான இடங்களுக்குப் புனிதமளிக்கின்றனர். கருமங்களை நற்கருமங்களாய்ச் செய்கின்றனர். சாஸ்திரங்களுக்கும் பெருமை அளிக் கின்றனர். –நாரத பக்தி சூத்திரம்

எவன் சித்தம் முற்றிலும் அமைதியாய் இருக்கிறதோ,

எவன் எல்லாரிடமும் மிருதுவாகவும் இனிமை யாகவும் நடக்கிறானோ,

எவன் இந்திரியங்களை வென்று விட்டானோ,

மன மொழி மெய்களினால் எவரிடமும் பகை யில்லாது எவன் இருக்கிறானோ,

எவன் மனம் கருணையினால் உருகி ஓடுகிறதோ,

எவன் திருட்டு, வன்முறைச் செயல்கள் ஆகியவற்றிலிருந்து எப்போதும் விலகியிருக்கிறானோ,

நற்குணங்களையே விரும்புபவனாய், பிறர் நன்மைக்கு உதவும் காரியங்களில் எவன் ஈடுபடுகிறானோ,

எவனது வாழ்க்கை நல்ல காரியங்களையே செய்வதனால் தூய்மையுற்றிருக்கிறதோ,

எவன் பிறர் மகிழ்வைக்கண்டு தான் மகிழ்கிறானோ,

எல்லா உயிர்களிடமும் கடவுள் வீற்றிருப்பதை உணர்வதனால் எவன் எவரிடமும் பொறாமையோ, பகைமையோ கொள்வதில்லையோ,

ஏழை எளியோருக்கு இரங்குவதே எவனுடைய இயல்பாகிவிட்டதோ,

எவன் பிறருக்கு உதவுவதிலேயே கருத்தாய் இருக்கிறானோ,

எவன் பிறரிடமுள்ள குணங்களைக் கண்டு மகிழ்ந்து, பிறர் குறைகளை மூடி மறைக்க விரும்பு கிறானோ,

எப்பொழுதும் கடவுளிடமே தன் உள்ளத்தைச் செலுத்தி எவன் இனிய மொழி பேசுகிறானோ,

அவனே பக்தன். —ஸ்கந்த புராணம்

அறியாமையுடன் அடக்கமில்லாமல் ஒருவன் நூறு வருஷம் வாழ்வதைக் காட்டிலும் நல்லொழுக்கத் துடன் தியானம் செய்து வரும் ஒருவன் ஒருநாள் வாழ்வதே மேலானது. —புத்தர்

புத்த பகவான் தியானத்தில் அமர்ந்திருந்த போது அவரைச் சூழ்ந்து பலவிதச் சம்பவங்கள் ஏற்பட்டன.

மன்மதன் தனது பாணத்தை இழுத்தான். அநேக வாத்தியக் கோஷ்டிகளுடன் மாரனுடைய வீரர்கள் தியானத்தைக் கலைத்தார்கள்.

கடைக்கண்ணாலும், மந்தகாசத்தாலும் அழகிய புருவங்களையுடைய தேவ கன்னிகைகள் அக்காரியத்தில் ஈடுபட்டார்கள்.

சித்தர்கள் கண்டு வணங்கினார்கள். இந்திரனும் ஆச்சரியப்பட்டான்.

இவ்வளவிற்கும் நடுவில் தமது சமாதியிலிருந்து விலகாது அமர்ந்திருந்த மகா ஞானியான புத்த பகவான் நம்மைக் காப்பாற்றட்டும்.

—மஹநீயர்கள் ஸ்தோத்திரம்

தேவாலயங்களிலும், மரங்களின் அடியிலும் வாசம் செய்தல்,

மான்தோல் தரித்தல்,

தரையில் படுத்தல்,

பொருள் அனைத்தையும் கைவிடுதல்,

பற்றுகள் யாதுமின்றி இருத்தல்,

இவை இன்பம் அளிக்கும் வைராக்கியங்கள்.

யோகாப்பியாசத்தில் இன்பம் காணலாம்.

போகத்தில் இன்பம் காணலாம்.

கூட்டத்தில் இன்பம் காணலாம்.

ஏகாந்தத்தில் இன்பம் காணலாம்.

ஆனால், உறுதியான குறைவற்ற இன்பமடைவது நம் உள்ளம் ஆண்டவனிடம் இன்புறுவதேயாம்.

கீழே விழும் அங்கோல விதையானது, எப்படி மறுபடியும் மேலேறி, அங்கோல மரத்தையே பற்றிக் கொள்ளுமோ, எப்படிக் காந்தக் கல்லிடம் ஊசி இழுக்கப்படுமோ, எப்படி மனைவி தமது கணவனைக் காதலிப்பாளோ, எப்படிக் கொடியானது மரத்தை விடாமல் சுற்றிக் கொள்ளுமோ, எப்படி நதி சமுத்திரத் துடன் இரண்டறக் கலந்து விடுமோ அப்படி பசுபதியின் தாமரையடிகளையடைந்து நம் மனோ விருத்தி அங்கேயே நிலைத்திருந்தால், அதுவே பக்தி என்று சொல்லப்படும்.

பக்தன் பகவானையே பரம் பொருளாகக் கொண்டவன். அதனால் அவனிடத்திலேயே நாட்டம் உடையவனாய் வாழ்கிறான்.

மனைவி, மக்கள், செல்வம் முதலியவற்றில் பற்று நீங்கியவனாய், எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்குபவனாய், தனக்குத் தீமை செய்வோரிடத்தும் வைரமில்லாதவனாய் வாழும் இவன், பகவானை எளிதில் அடைகிறான்.

உன்னுடைய குருவின் திருவடித் தாமரைகளைப் போற்றி உலகத்திற்கு அடிமையாயிருப்பதினின்று உன்னை விடுவித்துக் கொள். இந்திரியங்களையும் மனத்தையும் அடக்கிப் பகவானை உன் இதயத்தில் பார்.

–ஆதி சங்கரர்

ஆண்டவனை இடையறாது சிந்திப்பதே பக்தி.

–இராமானுஜர்

இறைவனது பெருமை பற்றிய ஞானத்துடன் கூடியதும், மற்ற எதனிடமும் காட்டப்படாது இறைவன் இடம் மட்டும் காட்டப்படுவதுமான விசேஷ அன்பே பக்தி எனப்படும்.

முக்தி, இத்தகைய பக்தியால் மட்டுமேயன்றி, வேறு வழியில் அன்று, —மத்வர்

பக்தி ஒன்பது வகை:

பக்திமான்களுடனும் பாகவதர்களுடனும் கூடி வாழ்தல்.

பகவான் லீலைகளின் கதைகளைக் கேட்டு ஆனந்தமடைதல்.

குருவின் சரணங்களை, புகழுக்கு ஆசைப் படாமல் சேவித்தல்.

தூய்மையுடன் பகவத் குணங்களைப் பாடுதல்.

வேதங்களில் கூறியுள்ளபடி, முழு நம்பிக்கை யுடன் மந்திரங்களையும், பகவான் நாமங்களையும் ஜபித்தல்.

தன்னை அடக்கல், நல்வழியில் நடத்தல், அதிகப் படியான உலகக் காரியங்களைக் குறைத்துக் கொள்ளுதல், புண்ணிய புருஷர்களுடைய கடமைகளில் ஈடுபடுதல்.

உலகம் அனைத்தையும் ஆண்டவன் உருவமாக எண்ணி, அடியார்களின் தொண்டை, கடவுளிடம் உள்ள பக்திக்கு மேலானதாகக் காணுதல்.

கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடைதல், கனவிலும் கூடப் பிறரிடம் குறை காணாமல் இருத்தல்.

வேஷம் போடாமல், உண்மையில் எளிய வாழ்க்கையைக் கையாண்டு, சந்தோஷமோ, துக்கமோ, ஏமாற்றமோ இல்லாமல் எப்போதும் கடவுளின் பாதங்களையே நம்பியிருப்பது.

–துளசிதாசர்

பூஜை, சேவை, நியமம், விரதம் எல்லாம் வெறும் விளையாட்டுக்களே. ஆண்டவனை உள்ளத்தால் தொட வேண்டும்.

–கபீர் தாஸர்

கடவுள் நாமத்தைப் பாடுவதால்தான் எல்லாரும் துயரத்திலிருந்தும், தவறுகளிலிருந்தும் விடுபட்டு சாந்தியை அடைய முடியும்.

தன்னைப் பார்த்த அளவிலேயே பிறர் கிருஷ்ண நாமத்தை உச்சரிக்கும்படி செய்ய வல்லவன் யாரோ அவனே சிறந்த வைஷ்ணவன், பக்தன்.

எள்ளளவேனும் பக்தியில்லாதவர்களின் சேர்க்கை பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாகும்.

உண்மையான பக்தியும், தெய்வ நம்பிக்கையும் இல்லாதவன் செய்யும் பூஜைகளும், மந்திரக் கிரியை களும், ஆடம்பர வழிபாடுகளும் வீணானவை.

பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவன் ஆன்மிக ஒளிபெற்ற இறைவனது ராஜ்ஜியத்தை அடைகிறான்.

கலியுகம் தீர்க்கதரிசிகளின் ஆட்சியில் இருந்தாலும், அதிலும் ஒரு நல்ல வாய்ப்பு உண்டு. அதுதான் கிருஷ்ணனின் நாம சங்கீர்த்தனம். அதனால் ஒருவன் உலகப் பற்றுக்களைக் களைந்தெறிய முடியும்.

இறைவனுக்குச் செய்யும் சேவை ஒன்றில் தான் உலக ஜீவன்கள் அனைத்தும் ஒன்றுபடுகின்றன.

–சைதன்யர்

குழந்தையானது தனக்குக் காசு கொடுக்கும் படி தாயைத் தொந்தரவு செய்தும், அழுதும், அடித்துங்கூட வேண்டுகிறது.

இந்தக் குழந்தையைப் போல எந்த மனிதன் ஜகன்மாதாவே தன் அன்னை என்று உறுதியான நம்பிக்கையுடன் அழுகிறானோ அவனே பலன் அடைகிறான். உலகமாதா அவனிடமிருந்து அதன் பின் மறைந்திருக்க முடியாது.

பக்தியோகம் இந்த யுகத்துக்கென விதிக்கப் பட்டுள்ளது. இந்த நெறியைப் பின்பற்றுவதால், மற்ற நெறிகளைப் பின்பற்றுவதன் மூலம் அடைவதைக் காட்டிலும் இன்னமும் எளிதாகக் கடவுளை அடையலாம்.

ஞானநெறி, கர்மநெறி ஆகியவற்றைப் பின்பற்றுவதால் நிச்சயமாகக் கடவுளை அடையலா மெனினும், அவை வெகு கடினமான மார்க்கங் களாகும்.

நீ பித்தனாய் இரு; ஆனால் உலக மாயையில் அன்று; இறைவனிடம் உள்ள அன்பில்.

மூங்கிலை எரித்தலினால் உண்டாகும் அக்கினி இடைவிடாது ஊதப்படாவிட்டால் சீக்கிரத்தில் அணைந்து போகும். இதுபோலவே ஆன்ம ஞானம் நம்மிடம் நிலைத்திருக்க வேண்டுமாயின் இடைவிடாத வைராக்கியமும் பக்தியும் அவசியமாகும்.

4

இறைவனிடம் இனிமை ததும்பிய இன்பத்தினுள் ஆழ்ந்துவிடு. அது ஒன்றே உனக்குப் போதுமானது. கடவுளுடைய எல்லை கடந்த மகிமைகளைப் பற்றியோ, அவனுடைய அளவையில் அடங்காத சிருஷ்டியைப் பற்றியோ, மதிப்புப் போடுவது உனக்கு அவசியமில்லை.

–இராமகிருஷ்ணர்

பக்தி கதறுவதன்று, பிச்சையெடுப்பதன்று; அது ஆனந்தமும், ஈசுவரப் பிரேமையும் நிறைந்து இங்ஙனம் என்று எடுத்துரைக்க இயலாத சம்பாவனை.

அது நாம் பார்க்கும் எல்லாவற்றிலும் எல்லா வற்றையும் பார்ப்பதே. அது உங்களுடைய திருஷ்டி விழுகிற இடங்களிலெல்லாம் உங்களுடைய சொந்த ஆன்மாவைப் பார்ப்பதே.

எல்லாம் ரம்மியமென்றும், அது நான்தானென் றும், அனுபவத்தில் அறிவதே பக்தியெனப்படும், தத்துவமஸி அதாவது 'நீ அதுவாயிருக்கிறாய்'.

–இராமதீர்த்தர்

விவாதத்திலோ, புகழிலோ, செல்வத்திலோ அல்லது உலக அனுபவத்திலோ இன்பத்தைக் காண முடியாது.

மனிதனுடைய மெய் இயல்பு கூறுவது போல நடப்பதிலேயே இன்பத்தைக் காண முடியும்.

நமது மூச்சே எண்ணங்களின் தாய்.

எண்ணங்கள் அடங்கினால் மனம் அடங்கும்.

எண்ணங்கள் அடங்க மூச்சை அடக்க வேண்டும்.

எண்ணங்கள் அடங்கி மனம் ஒய்ந்தவுடன் மனிதன் பிரம்ம ஸ்வரூபத்தை அடைகிறான்.

–சச்சிதானந்தர்

யோகாப்பியாசத்தின் குறிக்கோள், எல்லாப் பற்றுதல்களையும் விட்டுவிட்டுத் தெய்வத்தின் பக்கம் திரும்ப வேண்டும் என்பதே.

–அரவிந்தர்

பக்தருக்கு ஏமாற்றம் என்றால் என்னவென்றே தெரியாது. ஏனெனில் எல்லாவற்றையும் வகுத்து நடத்தும் அந்த ஆண்டவன் கையில் காலமே அடக்கம் என்பதும், எல்லாவற்றையும் உரிய காலத்தில் அவன் செய்வான் என்பதும் அவருக்குத் தெரியும்.

தான் கடவுளிடம் கொண்டுள்ள பக்திக்கு எவன் பலன்களைக் கனவிலும் எதிர்பாராதவனோ, அவனே உண்மையான கடவுள் பக்தன்.

சரியான பிரார்த்தனை உருவ வழிபாட்டில் இல்லை. ஆனால் உருவத்தில் கடவுளை வழிபடுவதில் தான் இருக்கிறது.

பக்தியும் நம்பிக்கையும் இல்லையேல் இந்த உலகம் ஒரு விநாடியில் ஒன்றுமில்லாமல் போகும். ஜபமும் தவமும் செய்து ஆண்டவனை வழிபட்டுப் பரிசுத்த வாழ்வு நடத்திய பெரியோர்களுடைய அனுபவ சக்தியை நம்முடைய பொருளாக எடுத்துக் கொண்டு ஆள்வதுதான் பக்தி என்று சொல்லப் படுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் அவதரித்த ரிஷிகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய மகான்களை நம்புவதும் வழிபடுவதும் மூட பக்தியன்று. விவேகமே யாகும்.

இறைவன் உருவை (விக்கிரகம்) தரிசிக்காமல் தியானம் செய்ய முடியாதவர்களுக்கு ஆலய தரிசனம் அவசியமாகும். —காந்தியடிகள்

தான்சென் ஒரு சமயம் தனியாகக் காட்டில் பாடிக் கொண்டிருந்த பொழுது, அக்பர் சக்கரவர்த்தி ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு அவரிடம் சென்று, "என்ன, நீ இவ்வளவு அழகாக என்னிடத்தில் பாடியதில்லையே?" என்று கேட்டார்.

அதற்கு அவர், "எப்படி முடியும்? நான் இது வரையில் உங்களைக் காட்டிலும் பன்மடங்கு பெரியவரும், என் உள்ளத்தைக் கவர்ந்தவருமாயுள்ள ஒருவரைக் குறித்துப் பாடிக்கொண்டிருந்தேன்'' என்றார்.

"என்னையும் விடப் பெரியவரா? அவர் யாராய் இருக்க முடியும்?" என்று அக்பர் வினவினார்.

''அவர்தான் கடவுள். என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். நான் உங்களிடத்தில் பாடும் பொழுது உங்களுடைய கட்டளையின் பேரில் பணத்துக்காகப் பாடுகிறேன். அதனால் என் மனது முழுவதையும் அப்பாட்டில் செலுத்துவதில்லை. ஆனால் லோக கர்த்தாவாகிய கடவுளுக்குப் பாடும் பொழுது நான் மனப்பூர்த்தியான கானத்தில் ஈடுபடுகிறேன்'' என்றார் தான்சென். —அமிருத சந்தோஷம்

புள்ளினங்களுக்கு இனிய கீதங்களைத் தந்துள்ளாய். அவை இன்னிசைகளைத் தருகின்றன.

எனக்கு நீ அளித்திருப்பது குரல் ஒன்று மட்டுமே. ஆயினும் நீ என்னிடமிருந்து வேண்டுவது அதை விட அதிகமே. ஆகையால் சங்கீதத்தைத் தொடங்குகிறேன்.

காற்றை லேசாகச் செய்த பெருமை உனக்கே உரியது. அக்காரணமே அதுவும் பணி செய்வதில் மிகவும் உற்சாகமும் வேகமும் கொண்டுள்ளது.

ஆனால் என் கைகளைச் சுமைதாங்கவே செய்திருக்கிறாய். எனது சுயமுயற்சியால் எனது கைகளை அழுத்தும் கவனத்தைக் குறைத்துக் கொண்டு, உன் திருப்பணியில் ஈடுபட வேண்டியே என்னை ஏவுகிறாய்.

இவ்வுலகனைத்தையும் படைத்து, நிழல்களின் இடையே தொடர்ந்த ஒளியை ஆங்காங்கே சிதறுண்டு கிடக்கவே செய்துள்ளாய்.

அவ்வளவுடன் அவ்வேலையை நிறுத்திக் கொண்டாய். என்னை மட்டும் என்றுமே வறுமையில் வாடவைத்து, உனக்கு வசிக்கத் தகுதியான விண்ணையும் மண்ணில் சிருஷ்டிக்கவே உத்தரவு இடுகிறாய்.

மற்ற ஜீவராசிகளுக்கெல்லாம் வேண்டியதை வழங்குவாய். என்னிடமிருந்து மட்டும் சதா உனக்கு வேண்டியதை விரும்புவாய்.

அறுவடைக் காலம் நெருங்குகையில், விதைத்த தற்கு அதிகமே என்னிடமிருந்து அறுவடை செய்ய விரும்புகிறாய், செம்பொன் மணியே. —தாகூர்

துணியை நீரால் தூய்மை செய்யலாம். மனத்திலுள்ள பாவமாகிய மாசைக் கடவுள் நாமத்தால்தான் கழுவ வேண்டும்.

பக்தர்கள் எப்பொழுதும் முக மலர்ச்சியோடும் மனமகிழ்வோடும் இருக்கிறார்கள். பகவான் திரு

நாமங்களைக் கேட்பதனால் துன்பங்கள் தேய்ந்து போகின்றன.

அவன் எஜமானன் — அவன் உண்மையான எஜமானன்; அவன் பெயரே உண்மைதான்.

அவனது குணங்களை வர்ணிக்க எவராலும் ஆகாது.

மக்கள் 'எனக்கு' 'எனக்கு' என்று அவன்முன் கைநீட்டி இரந்து கொண்டேயிருக்கிறார்கள்.

அந்த வள்ளலும் எவ்வளவு பேர் வந்து என்னென்ன கேட்டாலும் சிறிதும் அலுக்காமல் வேண்டியதை எடுத்து வழங்கிக் கொண்டேயிருக்கிறான்.

நான் அவன் திருமுன் போய் நிற்கையில் என்ன காணிக்கை செலுத்துவது, எவ்வகையில் என்ன வார்த்தை பேசினால் அவனது கடைக்கண் பார்வை என்மீது விழும் என்பதே எனக்குள்ள பெரிய பிரச்னை.

நான் பொன்னான காலைப் பொழுதில் எழுந்து பகவானின் உண்மைத் திருநாமங்களை ஓதவும், அவனது சிறப்புக்கள் குறித்து சிந்திக்கவும் வேண்டும்.

முற்பகலில் செய்வதன் விளைவுகள் நமக்குப் பிற்பகலில் கிடைக்கின்றன. இந்தப் பிறவியில் நாம் செய்யும் காரியங்களுக்கு ஏற்ப அடுத்த பிறவியில் நமக்கு உடல் அமைகிறது. ஆனால் மோட்சமோ அவனது அருள் நோக்கைப் பெறும்பொழுதே கிட்டும்.

—குருநானக்

பக்தியை அடிநிலையாகக் கொண்ட கோயில் உளது. அங்கு நின்று கடவுளை வணங்கு. மனத்தைத்

தூய்மை செய்ய விரும்புபவர் அங்கு உளர். கடவுள் தூயவரையே விரும்புகிறார்.

உன் இதயத்துள் நோக்குக. கடவுள் உறைவிடம் அதுவே.

செல்வமும், மக்களும் தெய்வத்தை மறக்கச் செய்து விடாதபடி காத்துக்கொள். —முகமது நபி

எவரைக் காணும் தோறும் இறைவன் ஞாபகம் வருகிறதோ அவர் ஆண்டவன் அடியாரில் சிறந்தவர்.

மலையைப் போன்ற அசையா நெஞ்சத்தினரையும் அவன் அடியோடு பெயர்த்து எறிந்திருக்கிறான். அறிவுமிக்க (வெளவால்) பறவையைத் தலை கீழாகத் தொங்கும்படி செய்திருப்பவன் அவனேயாகும்.

—மௌலானா ரூமி

தேவயாத்திரை செய்வோன் எப்பொழுதும் சோர்வடையக் கூடாது. இஷ்ட தேவதையின் அழகை, ஒரு லட்சம் வருஷம் பாடுபட்டுக் காணாவிடின், அப்போதும் சோர்வடையலாகாது. —பஹா உல்லா

ஆண்டவன் அன்புக்கு உரியவர்கள் ஏழைகளைப் போன்ற பணிவு பெற்றுள்ள செல்வர்களும், செல்வர்களைப் போன்ற பெருந் தன்மையுள்ள ஏழைகளும்.

பரிசுக்கும் தண்டனைக்கும் பயப்படாமல் இருந்தால் பக்கிரி தெய்வலோகத்தை அடைவான்.

அரசனுக்கு பயப்படுவது போல் கடவுளுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் மந்திரி தேவனாயிருப்பான்.

—ஸாஅதி

கைமாறு கருதி இறைவனை வணங்குபவர் ஒரு சாரர்; இது வாணிபமாம்.

தண்டனைக்கஞ்சி வணங்குபவர் மற்றொரு சாரர்; இது அடிமை வணக்கமாம்.

நன்றி செலுத்தும் மூன்றாம் வகுப்பினரும் உளர்; இதுவே சுதந்திர புருஷனது வழியாகும்.

–பென் அபு டாலிப் அலி

பக்தர்கள் மூன்று வகைப்படுவர். ஒவ்வொரு வகையாருக்கும் மூன்று அடையாளங்கள் உள. அவர்கள் அவற்றால் அறியப்படுவர்.

முதலாவது வகையார் அல்லாவைஂ அஞ்சி வணங்குகிறார்கள்.

தன்னைத் தாழ்மையாக எண்ணுதல்.

தான் புரிந்த நன்மைகளைக் குறைவாக எண்ணுதல்.

தான் செய்த பாவங்களை அதிகமாகக் கருதுதல் ஆகிய மூன்று அடையாளங்கள் உண்டு.

இரண்டாவது வகையார் அவனது அருளை ஆதரவு வைத்து வணங்குகிறார்.

எல்லா நிலையிலும் மக்களுக்கு நேர்வழி காட்டுதல்.

பிறரை விடக் கொடையாளியாக இருத்தல்.

மக்கள் யாவரையும்விட அல்லாவின்மீது நல்லெண்ணம் மிகுந்தவராக இருத்தல் ஆகிய மூன்று அடையாளங்கள் உண்டு.

மூன்றாவது வகையார் அல்லாவின்பால் அன்பு பூண்டு வணங்குகிறார்கள்.

நாம் விரும்புவதைப் பிறருக்குக் கொடுத்தல்.

கொடுத்தபின் அதைப்பற்றிப் பிரமாதமாக எண்ணாதிருத்தல்.

தனது மனப்போக்கை அடக்கி வணக்கம் செய்தல் ஆகிய மூன்று அடையாளங்களும் உண்டு.

–அபிபக்கு(ரஸி)

கடவுளிடம் உண்டாகும் நம்பிக்கை கடவுளிடம் அச்சம் உண்டாக்குவதாக இல்லாமல் அன்பு உண்டாக்குவதாக இருக்க வேண்டும்.

எல்லாம் கடவுள் செயல் என்று அறிந்தால் துன்பமுமில்லை. கவலையுமில்லை. –ஷிண்டோ

ஓர் ஏழைப்பெண் கோயிலில் வைத்திருந்த உண்டிப் பெட்டியில் இரண்டு சல்லிக் காசுகளைப் போட்டாள். இயேசு, தம் சீடர்களிடம், "இந்த ஏழைப் பெண் அளித்ததே மிகவும் பெரியதானமென்று நான் உங்களிடம் உண்மையாகச் சொல்லுகிறேன். ஏனெனில் மற்றவர்கள் எல்லாரும் தம்மிடமுள்ள பெருஞ் செல்வத்தின் ஒரு துளியை எடுத்துத் தந்திருக்க, இவளோ தன்னிடம் எதுவுமே இல்லாதிருந்தும் தன்னிடமுள்ள முழுவதையும் அளித்து விட்டாள்" என்றார். –இயேசு கிறிஸ்து

நாம் காணாத ஒன்றை நம்பிக்கொள்வதே பக்தியாகும். இதன் பயனால் காணாததைக் கண்டு விடுகிறோம். –ஸெயின்ட் அகஸ்தீன்

பிற மதத்தானாயினும் நெறி பிறழாதவனாயினும் அவனும் ஆண்டவன் அடியவனே.

கடவுளே, உம் சந்நிதானத்துக்கு வரத் தக்கவர் அறஞ் செய்பவர், உள்ளத்தில் உண்மையுடையவர், சொன்ன சொல் தவறாதவர், பிறர்க்குத் தீங்கு செய்யாதவர், அடியார்களைப் போற்றுபவர், இவர்கள் ஒருநாளும் நீக்கப்படுவதில்லை. —மூஸாலானார்

நீ என்றைக்கு உன்னைத் துறந்து விடுகிறாயோ அன்றைக்கே அவனது நிலையை அறிகிறாய். நீ உன்னைப் பார்க்காமல் முகத்தை எப்போது திருப்புகின்றாயோ, அப்பொழுதே அவனைப் பார்க்க முடியும். —ஈராக்கி

இரண்டு பேர் இறைவனுக்கு உகந்தவர்கள்

அவனை அறிந்து கொண்டு தன் இதயம் முழுவதையும் அவனிடம் ஈடுபடுத்தித் தொண்டு செய்பவன் ஒருவன்.

அவனை அறியாமல் தன் இதயம் முழுவதையும் அவனைத் தேடுவதில் ஈடுபடுத்துபவன் மற்றவன்.

—பானின்

உண்மையான பக்தன் யார் என்று கடவுளுக்குத் தெரியும். —பிரான்ஸ்

ஒரு பாவத்தை மற்ற மனிதர்களிடமிருந்து மறக்கச் செய்ய பல ஆண்டுகள் கழிவிரக்கம் கொள்ள வேண்டும். ஆனால் கடவுளுக்குக் கழிவிரக்கமுள்ள ஒரு துளி கண்ணீர் போதும். —நெப்போலியன்

மார்ட்டின் லூதருக்குப் பல குழந்தைகள் இருந்த படியால் அவர் தம்முடைய வருமானத்தைப் பெருக்க

வழிதேட வேண்டுமென்று அவருடைய நண்பர்கள் யோசனை கூறினர்.

அப்போது லூதர், "என்னுடைய குழந்தைகளுக்குப் பொருள் வைத்துப் போவதை என்னுடைய கடமையாகக் கருதவில்லை. கடவுள் அருளே செல்வத்திலும் உயர்ந்தது" என்றார். –இனிய சுவைகள்

தேவைகள் குறையும் அளவுக்கே தெய்வத் தன்மையை அடைவோம். –சாக்ரடீஸ்

அழுகின்ற கண்களில்தான் கடவுள் தன்மை பூரணமாகப் பரிணமிக்கின்றது. –கெர்ச்சிக்கார்டு

ஆண்டவன் இலன் எனினும் அறநெறி நிற்போம் என்பவரே அவன் அடியவராவர். –பிரௌனிங்

கடவுளை நேசி, அவர் உன்னுள் தங்கியிருப்பார்.

கடவுளுக்குப் பணிந்து, நட, அவர் தமது ஆழ்ந்த போதனைகளை உனக்குப் புலப்படுத்துவார்.

–ராபர்ட்ஸன்

கழிந்த காலத்தைக் கருத்திற் கொள்ளாது, இனிமேல் நிகழப் போவதற்கு இறைவனை நம்பி, நிகழும் இந்நாளை நீதியிலும் பக்தியிலும் கழிக்க வேண்டும்.

பக்தி என்றால் நேர்ந்ததையெல்லாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொள்ள வேண்டும். தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வது தான் உண்மையான பக்தி.

புலன்களை உள்நோக்கித் தியானம் செய்ய வேண்டும். நடுநிலைமை கொண்ட மனத்திற்குத்

தியானத்தினால் திருப்தி உண்டாகும்; சாந்தி கிடைக்கும்.

–மார்கஸ் ஒளரேலியஸ்

தெய்வ பக்தி லட்சியமன்று, சாதனமே. அந்தச் சாதனத்தால் ஆன்ம விருத்தி அடையலாம்.

வேஷதாரிகளே தெய்வ பக்தியை லட்சியமாகச் செய்து கொள்வர்.

–கதே

பக்தர் 'தன்'னைத் துறத்தல் போலவே அறிஞரும் 'தன்'னைத் துறத்தல் அவசியமானதே.

–கேடா

தியானத்தில் பயிற்சியுள்ளவன், ஒரு மணி நேரம், அல்லது ஒரு நாள் மட்டுமன்றி, தன் வாழ்நாள் முழுவதும் இன்புற்றிருப்பான்.

–ஐஸக் டெயிலர்

உயர்ந்ததனிடம் உண்டாகும் பக்தியிலும் உயர்ந்த உணர்ச்சி கிடையாது.

–கார்லைன்

ஞானம்

பல நிறங்களையுடைய பசுக்களின் பால் ஒரே வெண்மையுடையதாய் இருக்கிறது. அது போலவே ஞானிகள் பலவகைப்பட்ட சரீரங்களில் உள்ள ஜீவன்களை ஒரே அறிவு மயமானவர்களாய்க் காண்கிறார்கள்.

–பிரம பிந்தூபநிஷதம்

கறந்த பாலில் மறைந்து உறையும் நெய் போல, பரமாத்மா ஒவ்வொரு ஜீவனிடத்தும் வாழ்கிறான்.

–உபநிஷதம்

ஞானத்திற்கும், ஞானம் தராத கல்விப் பயிற்சிக்கும் வெகுதூரம். கற்றதெல்லாம் அறிவாகாது. வேதாந்தம் படித்து அறிந்ததனாலேயே பரமாத்மாவின் தரிசனம் கிடைத்துவிடாது. உள்ளத்தில் சாந்த

சமநிலை அடையாதவன் அறிவினால் மட்டும் பரம் பொருளைக் காணமுடியாது. –கடோபநிஷதம்

சூரியன் பிரகாசித்து நின்றாலும் குருடனுக்குப் பயனில்லை.

அதுபோல் ஈசன் எங்கும் நிறைந்து நின்றாலும் அஞ்ஞானிகளுக்குப் பயனில்லை. –ஞான ரத்னாவளி

புலன்களைப் பட்டினி போடுவோனிடமிருந்து விஷயங்கள் தங்கள் சுவையில் ஆசையை மட்டும் விட்டு ஓடிப் போகின்றன.

பரம்பொருளின் தரிசனம் கிட்டும்போது அந்த ஆசையும் மறைந்து விடும்.

ஞானம் என்னும் வாள் கொண்டு, அறியாமையால் மனத்தில் எழுந்துள்ள ஆன்மாவை ஒட்டிய சந்தேகத்தை வெட்டிச் சாய்த்துவிட்டு யோகம் பற்றி எழுந்து நில். –பகவத் கீதை

யோகம் என்பது சித்த விருத்தியை அடக்குதல்.
–பதஞ்சலி யோகம்

'என் தந்தை' 'என் தாய்' 'என் மனைவி' 'என் வீடு' என்று இவ்வாறு உண்டாகும் 'எனது' என்னும் உணர்ச்சியே மோகம் எனப்படும். –பத்ம புராணம்

ஞானமே பார்வையின் உறுப்பு. சீலமே உண்மையான பெருந்தன்மை; திருப்தியே உண்மை யான சந்தோஷம். செய்யக் கூடாத காரியத்தைச் செய்யாமல் இருப்பதே உண்மையான புலமை.
–பஞ்ச தந்திரம்

சுகத்திலிருந்துதான் வேதனை பிறக்கிறது. சுகத்தி லிருந்துதான் பயம் பிறக்கிறது. சுகத்திலிருந்து

விடுபட்டவன் வேதனையையோ, பயத்தையோ அறியான்.

—புத்தர்

ஆக்குவ தேதெனில் அறத்தை ஆக்குக;
போக்குவ தேதெனில் வெகுளி போக்குக;
நோக்குவ தேதெனில் ஞானம் நோக்குக;
காக்குவ தேதினில் விரதம் காக்கவே.

—ஜைன காவியம்

ஒரு மனிதன் இறந்த பின்னர் கீழான பிறப்பு எடுக்க நேர்ந்தால், மறுமுறை மனிதப்பிறவி அடைவது மிகவும் கடினமான காரியமாகும்.

ஆகவே, நாம் இங்கு வாழும் ஒவ்வொரு நொடியும், நேர்மையான, ஆன்மிக நாட்டமுள்ள வாழ்க்கையே வாழ வேண்டும்.

—மகாவீரர்

நீரில் கரைந்து போன உப்புக் கட்டியைக் கண்ணால் காண முடியாது; நாவினால் ருசித்தறியலாம்.

அவ்வாறே உள்ளத்தின் ஆழத்தில் ஊடுருவி யிருக்கும் பிரமத்தை வெளி இந்திரியங்களால் அறிய முடியாது. தீர்க்கதரிசியாகிற கருணை நிறைந்த குருவின் உபதேசத்தால் ஏற்படும் ஞானம், கண் விழிப்பால்தான் அறிய முடியும்.

அந்த உபதேசமாவது:- "உன்னைச் சுற்றிக் காணப்படும் உலகம் நீயன்று — நீ பிரமமே".

நல்லோர்களின் கூட்டுறவால் பற்றின்மை ஏற்படுகிறது. பற்றின்மையால் மாயையினின்றும் விடுதலை ஏற்படுகிறது. மாயையிலிருந்து விடுதலை கிட்டினால் என்றும் மாறாத உண்மை உண்டாகிறது.

மாறாத உண்மையை உணரும்போது, ஜீவனுக்கு முக்தி ஏற்படுகிறது.

தேத்தாங் கொட்டைப் பொடியானது தண்ணீரைச் சுத்தமாக்கிவிட்டுக் கீழே படிந்து விடுகிறது.

அதுபோல் ஞானமானது அஞ்ஞானத்தால் அழுக்கடைந்த ஜீவனை அப்பியாசத்தால் அழுக்கற்ற தாக்கிவிட்டுத் தன்னையும் மறைத்துக் கொள்கிறது.

எனக்குக் குணமும் இல்லை; செயலுமில்லை. நான் என்றுமுள்ளவன், சுதந்திரமானவன், அழியாதவன்; அஸத்தான உடலல்லன் என்று இங்ஙனம் அறிவது தான் ஞானம்.

வைராக்கியத்தின் பயன் ஞானம்; ஞானத்தின் பயன் விஷய சுகங்களை நாடாமல் ஆன்மானந்தத்தை அனுபவித்தல்; அதனால் விளைவது பரம சாந்தி.

முக்தியை விரும்பி ஒருவன் காசிக்கு யாத்திரை செல்லலாம்; விரதமிருக்கலாம்; ஏழைகளுக்குத் தானம் செய்யலாம்; ஆனால் ஞானமன்றி இவை முக்தி யளிக்கமாட்டா.

—ஆதி சங்கரர்

இறைவனைத் தவிர்த்த மற்ற எல்லா விஷயங் களையும் முற்றிலும் விட்டு அவனுடைய திருவடிகளில் உங்களுடைய ஆன்மாவைச் சமர்ப்பியுங்கள். அவ்வாறு உய்வடையுங்கள்.

ஆன்மா அழிவற்றது. நிலையானது. உடலோ மின்னலைக் காட்டிலும் நிலையற்றது. இவ்வாறு உள்ள நிலைமையில் பகவானை நினைத்துக் கொண்டே இருங்கள்.

'நான், என்னுடையது' என்ற இருவகைப் பற்றுக் களையும் வேரற (வாசனையும் இல்லாதபடி) அழித்து விட்டு இறைவனைச் சேருங்கள்.

எல்லாச் செல்வங்களும் இறைவனுக்கு உரியன. நாமும் அவனுடைய சொத்துதான் என்று நினையுங்கள்.

இறைவனால் தமக்குத் தொண்டு செய்வதற்கென கொடுக்கப் பெற்ற நமது மனம், மொழி, மெய் மூன்றையும் பிற விஷயங்களிலிருந்து திருப்பி, அவனிடம் வையுங்கள். அவ்வாறு செய்தால், அவனுடைய தொண்டுகளுக்கு விரோதமான இடையூறுகள் ஒழியும்.

எண்ணிறந்த ஜீவன்களையும், முடிவற்ற கல்யாண குணங்களையும் உடையவனான பகவானுடைய திருவடிகளை அடைந்தாரின் நழுவ விடாத திருவடிகளை அடையுங்கள். –நம்மாழ்வார்

வாழ்க்கையின் லட்சியம் சாஸ்திரங்களில் கூறப் பெற்றுள்ள விதிகளையும் கட்டளைகளையும் ஒரு மனிதன் பின்பற்ற வேண்டும் என்பதே. இதுவே பக்தியைப் பெறும் உபாயம் ஆகும்.

அடுத்தது கிருஷ்ணனிடம் தமது செயல்களின் பயன்களை ஒப்புவித்தல், அதாவது சரணடைதல்.

அதற்கடுத்தது தன்னை ஒப்படைத்தலால் விளையும் பக்தியே.

பின்னர் ஞானம் கலந்த பக்தியும், யுக்தியே இல்லாத சுத்த பக்தியும், அதனைத் தொடர்ந்து அன்பு கலந்த பக்தியும் மிகச் சிறந்தது.

கிருஷ்ணனைத் தோழனாக அன்பு செய்தல்
கிருஷ்ணனைக் குழந்தையாக நேசித்தல்
கிருஷ்ணனைக் காதல் மணவாளனாகக்
கொள்ளல்.

இறுதியாக "பிரேம-விலாச-விவர்த்தம்" என்னும் உயர்ந்த நிலை. இது ஐக்கியத்தை அநுபூதியைப் பற்றிய உண்மை. இதில் அன்பு செய்வோருக்கும், அன்பு செய்யப்படுவோருக்கும் வேறுபாடில்லை.

இதிலேதான் 'தத்துவமஸி' — 'அது நீயாக இருக்கிறாய்' என்னும் உண்மை தெளிவாகிறது.

–சைதன்யர்

காய்க்காக மரம் பூக்கிறது. காய் தோன்றியது. பூ உதிர்கிறது. அது போல, ஞானத்திற்காக வினை செய்தால், ஞானம் கிட்டியதும் வினை அழியும்.

–கபீர்தாசர்

மிதிலை மன்னர் நிமி விருந்துச் சாப்பாட்டை முடித்துக் கொண்டிருந்தார்.

ஒரு பருந்து சிறு இறைச்சித் துண்டம் ஒன்றைக் கொத்தியபடி பறந்து வந்தது.

அதன் பின்னால் நூற்றுக்கணக்கான காக்கை குருவிகள் கரைந்து கதறிக் கொண்டு படையெடுத்து வந்தன.

ஒவ்வொன்றும் அலகால் பருந்தைத் தாக்கி மாமிசத் துண்டைப் பறிக்க முயன்றன.

இவ்வளவையும் சமாளித்து அந்த அற்ப உணவைவிடாமல் வட்டமிட்டுக் கொண்டிருந்தது பருந்து.

கடைசியில் அதற்கே சலிப்பு வந்து இறைச்சித் துண்டைக் கீழே போட்டு விட்டது.

வேறொரு பறவை அதைக் கொத்திக் கொண்டு பறந்தது. உடனே எல்லாப் பறவைகளும் அதைத் துரத்தித் தாக்கின.

பருந்து நிம்மதியாக தன் இருப்பிடத்துக்குப் போய்ச் சேர்ந்தது.

இறைச்சியைக் கொத்திய மறு பட்சியும் பிறகு அதைப் போட்டுவிடவே, வேறொன்று கொத்திக் கொண்டு விரைந்தது.

பறக்கும் பட்டாளமும் முந்திய பட்சியை விட்டு விட்டு, புதிய எதிரியைத் துரத்தின.

இப்படியே இறைச்சித் துண்டமும், அதற்கான தாக்குதலும் இடம் மாறிக் கொண்டே போயின.

அரசர் நிமியின் பகுத்தறிவு அப்போது ஓர் உண்மையை உணர்த்தியது.

“காமம், போகம், பொருள், சுயநலம் ஆகியவற்றில் ஈடுபட்டுத் திரிபவர்களுக்கும் இந்தப் பருந்து முதலான பறவைகளின் கதிதான் ஏற்படுகிறது. எவர் அவற்றைத் துறக்கிறாரோ அவருக்கு நிம்மதியும் சுகமும் கிடைக்கின்றன. அப்படித் துறக்காதவர் துன்பத் தாக்குதல்களுக்கு இரையாகிறார்கள்”.

அன்று முதல் அரசர் நிமி போக ஆசைகளைத் துறந்து தியாக வாழ்வை மேற்கொண்டார்.

–புராணக் கதை

நெருப்பானது கரியைப் பற்றிக் கொண்டால், அக்கரியின் கருநிறத்தைப் போக்கி விடுகிறது.

அதுபோல, ஞானமாகிய நெருப்பால் மனம் பற்றி எரியும் போது அதன் சுபாவ குணமும் அழிந்து போகும்.

–இராமகிருஷ்ணர்

இருளில் ஏற்பட்ட திக்பிரமையானது, ஒளியில் நீங்குவது போல, அஞ்ஞான நிலையில் ஏற்பட்ட அகங்காரம், மமகாரம் முதலியவை எல்லாம் தத்துவ ஸ்வரூப அனுபவத்தில் ஏற்படும் ஞானத்தால் உடனே அழிந்து போகும்.

–காந்தியடிகள்

தன்னை ஒதுக்கும் தியாகம்–இதுவே இறைவன் மனிதனுக்கு அருளியுள்ள தலைசிறந்த ஞானமாகும்.

–கார்லைல்

மெய் ஞானத்தின் லட்சணம் எவை எனில், தன்னலமின்மையும், நாணமுமேயாகும்.

–ரஸ்கின்

உண்மையில் பெருங்கடல் நம்மால் அறியப்படாமல் பரந்து கிடக்கின்றன. நாமோ, கடற்கரையில் விளையாடி, அங்கும் இங்கும் ஓடி, அழகான ஒரு சிப்பியையும், மெல்லிய ஒரு கடற்பாசியையும் கண்டு மகிழ்ந்து நிற்கும் சிறு குழந்தை களைப் போல் இருக்கிறோம்.

–ஆல்பரி

நாம் கடவுளின் கரத்தினால் வீசிய கவண்கல், இப்புவியில் விழுந்தபின் எதிர்த்துச் செல்ல முடியாது.

–விக்டர் ஹ்யூகோ

ஞானம் பெற்றவர் இன்பத்தை நாடுவதில்லை. ஆனால் கவலையினின்றும், துன்பத்தினின்றும் விடுதலை பெற விரும்புவர்.

–அரிஸ்டாட்டில்

உலகின் ஞானத்தையெல்லாம் பிழிந்தெடுத்தால் இரண்டே சொற்களில் அடக்கி விடலாம். பொறுத்திரு; நம்பிக்கையுடனிரு. –அலெக்ஸாந்தர் டுமாஸ்

உனக்கு ஞானம் வேண்டுமானால் நீ தண்ணீருக்குள்ளே மூழ்கியிருக்கும்போது காற்றுக்கு எவ்வளவு தவிப்பாயோ, அவ்வளவு தவிப்புடன் ஞானத்துக்கு ஆசைப்படு. அப்போதுதான் உனக்குக் கிடைக்கும்.

நற்குணங்களையே நான் ஞானம் என்று சொல்லுவேன். –சாக்ரடீஸ்

தினசரி வாழ்க்கையில் நம்முன் கிடப்பதை அறிவதே முதலாவதான ஞானம். –மில்டன்

உண்மையைக் காண்பதும், நல்வழியில் நடப்பதுமே தத்துவ ஞானத்தின் இரண்டு முக்கிய லட்சியங்கள் ஆகும். –வால்டேர்

தத்துவ ஞானம் கற்பது, 'தன்னை' சாகத் தயாராக்குவதேயன்றி வேறன்று. –ஸிஸரோ

தத்துவ ஞானத்தை மேலெழுந்தாற் போலக் கற்றால், அது சந்தேகங்களை எழுப்பும்; தீர்க்கமாக ஆராய்ந்தால் சந்தேகங்களை நீக்கும். –பேக்கன்

இந்நாளில் தத்துவத்தைப் போதிக்கும் பேராசிரியர்கள் இருக்கிறார்கள்; ஆனால் தத்துவ ஞானிகள் யாருமில்லை. –தோரோ

ஒரு மதத்தின் உண்மையான வேறுபாட்டை உணர மாட்டாத ஒருவன், வெறும் தத்துவ ஞானம் மட்டும் பேசுவதனால் அவன் பெரிய நன்மை ஒன்றும் அடையமாட்டான். –ரூஸோ

உருவகக் கதைகள் நேர்த்தியான ஆபரணங்கள், நல்ல விளக்கங்கள். ஆனால் அவை தத்துவ விஷயங்களுக்கு நிரூபணமாகமாட்டா. -லூதர்

தத்துவம் என்பது ஆகாயத்திலே கோட்டை கட்டுவதோ அல்லது வீண் எண்ணங்களோ அல்ல; மக்கள் சமுதாய வாழ்க்கையின் சட்டமும் அதன் நடத்தையுமே தத்துவத்தின் நோக்கமாகும். தாம்ஸன்

நீ தத்துவ ஞானியாக இரு; ஆனால் உன் தத்துவ ஞானத்திடையே, மனிதனாகவும் இரு. -ஹ்யூம்

ஞானி

மனம் ஐம்பொறி விஷயங்களில் ஈடுபடுமானால், அதன் அறிவு என்னும் சுக்கான் அழிந்து போகும். அப்பொழுது புயலில் அகப்பட்ட கப்பல் போலத் தகர்ந்து போகும்.

மனத்தை அடக்கியிருந்தாலும் சில சமயங்களில் ஐம்பொறி ஆசைப் புயல்கள் எழுந்து மனிதனுடைய அடக்க சக்தியை வேரொடு பறிக்க முயல்வதுண்டு. அவன் தன்னுடைய மனோராஜ்யத்தை அந்தப் புயலுக்கு பறிகொடுத்துவிடாமல் என்னை உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். எவன் இந்திரியங்களை அடக்கக் கூடியவனோ அவனே ஞான ஒளியாவான்.

ஐம்பொறிகளை நுகர்வதற்கான விஷயங்களைச் சிந்தித்தால், அவற்றில் பற்று உண்டாகிறது. பற்றிலிருந்து ஆசை உண்டாகிறது. ஆசையிலிருந்து அடங்கா மோகமுண்டாகிறது. மோகத்தால் சிந்தை கெடவே, ஞாபகம் அழிகின்றது. ஞாபகம் கெடவே,

உயர்ந்த லட்சியம் மறைந்து விடுகிறது. அப்பொழுது மனிதன் அழிந்து விடுகிறான்.

எவனை ஐம்பொறிகள் அலைக்கழிக்க வில்லையோ, எவன் தன்னைத்தானே ஆண்டு கொள்கிறானோ, அவனிடம் பரிபூரண ஞானம் காணப்படும்.

ஆன்ம ஞானம் பெறாதவர்களுக்கு நள்ளிருளாய்த் தோன்றுவது, ஞானிகளுக்குப் பட்டப் பகலாய்த் தோன்றும், பட்டப் பகலாய்த் தோன்றுவது ஞானிக்கு இருண்ட அஞ்ஞான அந்தகாரமாய்த் தோன்றும்.

தினந்தோறும் கடலுக்குள் ஆறுகள் வந்து பாய்கின்றன. ஆனால் கடல் நீர் கரைபுரண்டு ஓடுவதில்லை. கடலில் நீர் கூடுவதில்லை; குறைவதுமில்லை. அவ்விதமாக இருப்பவன் பரிபூரண ஞானி. ஐம்பொறிகள் வழியாக அவனுடைய ஆன்மாவுக்குள் ஆசை வெள்ளங்கள் வந்து பாய்ந்து கொண்டேயிருக்கும். ஆனால் அவனுடைய ஆன்மாவோ, அவற்றின் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்ட போதிலும் எப்பொழுதும் ஒன்று போல அமைதியாக இருக்கும்.

—பகவத் கீதை

பலாத்காரத்தால் தன் காரியத்தை முடிப்பவன் நீதிமான் ஆகான்.

நன்மை தீமை இரண்டையும் சீர்தூக்கி முடிவு செய்பவனே ஞானி.

பிறருடைய தவறுகளையாவது, அவர்கள் செய்தோ செய்யாமலோ உள்ள பாவங்களையாவது ஞானியானவன் கவனியாமல், தன் சொந்த

குற்றமுள்ள செயல்களையும் அஜாக்கிரதைகளையும் கவனித்தல் வேண்டும்.

அறிவின்றித் தியானமில்லை. தியானமின்றி அறிவில்லை. அறிவும் தியானமும் யாரிடமுண்டோ அவரே சாந்தி அடைவர். —புத்தர்

உளுந்தின் தோல்வேறு, அதன் பருப்பு வேறு. இந்த ஆன்மாவும் உடலும் வெவ்வேறாய் இருப்பது போல்தான். இந்த வேறுபாட்டைக் குறித்துச் சதா சிந்தித்து வந்ததன் பயனாக உள்ளத் தூய்மை பெற்று விட்ட மகானுக்கு, எழுத்தறிவில்லாவிடினும் ஞானம் (பூரண ஞானம்) கைவந்து விட்டது என்று சொல்லலாம். —மகாவீரர்

சுவையறிவற்ற காக்கை வேப்பங்கனியைக் கொத்தும். சுவையறிவுடைய குயிலோ மாம்பூக்களை உண்ணும்.

அதைப் போல துர்ப்பாக்கிய சாலியான ஞானி, வறட்டு ஞானத்தைச் சுவைப்பான். பாக்கியசாலியான ஞானி, கிருஷ்ண பிரேமாமிருதத்தைப் பருகுவான்.

—சைதன்யர்

ஆமையானது தன்னுடைய உறுப்புகளைத் தன்னுடைய ஓட்டுக்குள் அடக்கிக் கொள்வது போல், தன்னுடைய ஐம்புலன்களையும் பொருட்கள் மீது செல்லவொட்டாமல் தடுத்துக் கொள்கிறவனே ஞானி ஆவான். —இராமகிருஷ்ணர்

எவனுடைய அறிவு நியாயமாக இல்லையோ, அவன் எளிதில் கோபத்துக்கும், தீய எண்ணங்களுக்கும், இன்னா சொற்களுக்கும் இடம் கொடுத்து விடுவான்.

ஆனால் அதற்கு மாறாக, எவனுடைய அறிவு அசையாமல் நிற்கின்றதோ, அவன் புகழையும் இகழையும் ஒன்றாகவே மதிப்பான். ஏச்சு மொழிகள் ஏசும் நாவை இழிவு படுத்துமேயன்றி, ஏசப்பட்டவனை இழிவுபடுத்தாது என்பதை உணர்ந்து கொள்வான்.

ஆதலால் ஞானியானவன் யாருக்கும் தீமை எண்ண மாட்டான். பகைவனுக்காகக் கூட கடைசி வரை கடவுளிடம் பிரார்த்தித்துக் கொள்வான்.

–காந்தியடிகள்

தூங்கும் போது, எஜமானன் என்னும் நினைவும் இல்லை, அடிமை என்னும் நினைவும் இல்லை. தூங்கும் போது கைதி சிறையில் இருப்பதை மறக்கிறான். தூங்கும் போது அரசன் தன் செல்வத்தை மறக்கிறான். துயரமோ, கவலையோ, லாபமோ, நஷ்டமோ, எவனையும் பற்றிய நினைப்போ, பயமோ அப்போது இல்லை.

உண்மை ஞானி உலகில் வாழும் வகை இப்படித்தான். அவன் விழிப்போடு தூங்குவான். இரவும் பகலும் உலக விஷயங்களுக்குச் செத்தவன் போல இருப்பான். கடவுள் கையில் உள்ள ஓர் எழுது கோலைப் போல நடப்பான்.

–ஜலாலுதீன் ரூமி

“என்னுடையது என்னுடையது, உன்னுடையதும் என்னுடையது” என்று சொல்லுகிறவன் அதமன்.

“என்னுடையது என்னுடையது உன்னுடையது உன்னுடையது” என்று சொல்லுகிறவன் மத்திமன்.

‘உன்னுடையதும் உன்னுடையது. என்னுடையதும் உன்னுடையது”. என்று சொல்லுகிறவன் உத்தமன்.

உன்னுடையதுமன்று, என்னுடையதுமன்று எல்லாம் பகவானுடையதே" என்று சொல்லுகிறவன் ஞானி.

–சான்றோர்

ஏதையும் எதிர்பாராதவன் ஞானி–

ஏனெனில் அவனுக்கு ஏமாற்றம் இல்லை.

–வில்லியம் கௌப்பர்

ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று; அறியவேயாகும்.

–கதே

ஞானம் அடைந்த ஒவ்வொருவனும் இந்த உடலை விட்டுப் போகவே விரும்புவான். ஆனால் பலவந்தமாக உயிரைப் போக்கிக் கொள்ள மாட்டான்.

–சாக்ரட்டீஸ்

பொருள் ஒன்றுமே இல்லாதவனும், உடுப்பதற்கு ஆடையோ, தங்குவதற்கு வீடோ இல்லாதவனும், அழுக்கடைந்தவனும், ஊரோ, நாடோ இல்லாதவனுமான ஒருவனது வாழ்க்கையும் சுகமாகவே கழிகின்றது. இது எவ்வாறு என்று காட்டுவதற்காக கடவுள் ஒரு மனிதனை இதோ உங்கள் முன் அனுப்பியிருக்கிறார். அவன் நான்தான்.

எனக்கு ஓர் ஊர் இல்லை. ஒரு வீடு இல்லை. ஒரு பணியாளும் இல்லை. நான் நிலத்தின் மேலேயே படுத்து உறங்குகிறேன். எனக்கு மனைவியோ, மக்களோ இல்லை. தரையும், வானமும் ஒரு கிழிந்த கந்தையுமே எனது ஆஸ்திகள்.

யாதாயினும் ஒரு பொருளை விரும்பி அதனை அடையாமல் இருந்ததோ அல்லது வேண்டாம் என்று

விலக்கிய ஒரு காரியத்தில் இறங்கித் தவித்ததோ இல்லை.

தெய்வத்தின் மீதாயினும், தனி ஒரு மனிதன் மீதாயினும், எப்பொழுதும் குறை கூறியது இல்லை. எந்த மனிதன் மீதும் நான் பொல்லாங்கு சொல்லியது கிடையாது. துக்கத்தினால் முகம் வாடியிருந்தது மில்லை.

ஒரு மனிதனுக்கு இத்தகைய விஷயங்களைச் சிந்திக்கவும், சூரிய சந்திர நட்சத்திரங்களைக் காணவும், நிலத்தையும், நீர் நிறைந்த கடலையும் கண்டு களிக்கவும் வசதிகள் இருக்கையில், அவனை ஓர் ஒண்டியென்றோ, நொண்டி என்றோ சொல்லுவது தகாது.

—எபிக்டிடஸ்

ஆன்மா

ஆன்மாதான் இந்த அழியும் உடலில் ஜீவனைப் புகுத்தி இயங்க வைத்திருக்கிறது. ஜடமான இந்தத் தேகத்துள் உணர்வையும், அறிவையும் வைத்திருக்கிறது. இந்த அவலட்சணமான மேனிக்கு மினுக்கும், வனப்பும் ஊட்டுவது அதுவே.

ஆன்மாவின் இயக்கத்தாலும் உதயத்தாலுமே ஜீவராசிகளின் வாழ்வு மலர்கிறது; இயங்கி வருகிறது.

—ரிக் வேதம்

ஆன்மா இருக்கிறது என்றும், இல்லை என்றும், இருக்கிறதோ இல்லையோ என்றும், இல்லவே இல்லை என்றும், சலம், ஸ்திரம், உபயம், அபாவம் என்ற நான்கு வகையில், அறிவிற் சிறியோர் ஆன்மாவைப் பற்றி விவாதம் செய்து, ஆன்ம தத்துவத்தை மறைக்கிறார்கள்.

ஓம் என்ற சொல் உலகந்தான்; இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் எல்லாம் ஓம்தான். காலத்தைக் கடந்து நிற்பதும் ஓம்தான்.

சாக்கிரத் (விழிப்பு) சுவப்ன (கனவு) சுழுத்தி (உறக்கம்) இந்த அவஸ்தைகளிலும் தனித்து நிற்பது அதுதான்.

ஓங்காரந்தான் நம் ஆன்மா. இதை எவன் அறிகின்றானோ அவன் அறிந்தவனாவான்.

–மாண்டுக்கிய உபநிஷதம்

ஆன்மாவே சர்வம். பேரிகை ஒலியையும், சங்கு ஒலியையும், வீணை ஒலியையும், பேரிகை, சங்கு, வீணை இவற்றினின்றும் பிரிக்க இயலாது. அவற்றுள்ளே அடங்கி இருக்கின்றன. அதே போல உலகம் முழுவதையும் ஆன்மா தனக்குள்ளே அடக்கி வைத்திருக்கிறது.

எல்லா சுயானுபூதிகளும் ஆன்மானுபவத்தில் புகுந்து ஒன்றுபடுகின்றன.

ஆன்மாவைப் பற்றிய சர்ச்சைகள் விலகினால் ஆன்மா அகண்ட அனந்த ஞான சொரூபம் விளங்கும்.

கடவுள் சர்வம்-பிரமம். எல்லாப் பிரபஞ்சங்களும் வண்டிச் சக்கரத்தில் சுற்றியுள்ள மரத் துண்டுகள் போல அதனுள் இருக்கின்றன. எல்லாப் பெயர்களுக்கும் உருவங்களுக்கும் அது ஆதாரம்.

ஆனால் அதற்குப் பெயரில்லை, உருவமில்லை. நாமும் அதுவும் ஒன்றுப்படும் போது யார் யாரைக் காணமுடியும்; கேட்க முடியும்; தொட முடியும் சர்வம் பிரமம்.

எல்லாவற்றிலும், எல்லா இடங்களிலும் அந்த ஒரே ஆன்மாவையே நாம் காண வேண்டும்.

துவைத பாவம் (இரண்டு என்ற எண்ணம்) இருக்கும் வரையில்தான் தகராறுகள் எல்லாம். ஒன்று என்று ஆனதும் எல்லாச் சண்டைகளும் தீர்ந்து போகின்றன. –பிருஹதாரண்யக உபநிஷதம்

காதுக்குக் காது, கண்ணுக்குக் கண், மனத்துக்கு மனம், வாக்கிற்கு வாக்கு, உயிருக்கு உயிர், எது மனத்தினால் எண்ணப் படாததோ, ஆனால், எதனால் மனம் நினைக்கும் திறமை பெறுகிறதோ, கண்ணால் காணப்படாததும், ஆனால், கண்ணிற்குப் பார்க்கும் திறமை அளிப்பதும், காதால் கேட்கப்படாததும், ஆனால், காதுக்குக் கேட்கும் திறமையளிப்பதும் எதுவோ, அதுதான் ஆன்மா. –கேன உபநிஷதம்

பாலில் வெண்ணெய் மறைந்திருப்பது போன்று ஆன்மா உயிர்களில் வசித்திருக்கிறது.

மனது என்னும் மத்தால் அது எப்போதும் கடையப்படவேண்டும். –அம்ருத பிந்தூபநிஷதம்

ஆராய்ந்து பார்த்தால் கருவியாகிய புலனையும் அதனால் உண்டாகும் உணர்ச்சியையும் தவிர்த்து ஒரு பொருள் எஜமானனாக மிஞ்சுகிறது. அதுவே, நாம் ஆராயும் பொருள்.

மனிதன் விழித்தும் தூங்கியும் இருப்பான். விழித்த போதும், தூங்கும் போதும், கண்டு, கேட்டு, தொட்டு அடைந்த விஷய உணர்ச்சிகள் எந்தப் பொருளின் மேல் தங்கித் தொடர்ச்சியறாமல் நிற்கின்றதோ, இந்த இடையறா உணர்ச்சிக்கு எது ஸ்தானமோ, அந்த சேதனப் பொருளே ஆன்மா. அது வேற்றுமை அற்றது.

உறுதியான அறிவு படைத்தவன் இதை அறிவான். அறிந்து வேற்றுமைகளால் உண்டாகும் துக்கத்தை நீப்பான்.

இவ்வாறு இன்பங்களை அருந்திக் கொண்டு உள்ளத்தில் வீற்றிருக்கும் ஆன்மா, எல்லாவற்றிற்கும் எஜமானர்.

இதை அறிந்து மனிதன் யாதொரு பயமும் கவலையும் இல்லாமல் நிற்பான். அந்த நிலையில் பரம் பொருளைக் காணப் பெறலாம். –கடோபநிஷதம்

இந்தச் சரீரம் சாகக் கூடியது. சாவினால் பீடிக்கப்படுவது. மரணத்தையே அறியாததும், உடம் பற்றதுமான ஆன்மாவுக்கு இது இருப்பிடம்.

உடம்புடன் கூடிய இவன், விருப்பு வெறுப்பால் பீடிக்கப்படுகிறான். உடம்புடன் கூடிய இவனுக்கு விருப்பு வெறுப்பினின்று விடுதலை இல்லவே இல்லை. ஆனால் சரீரம் இல்லாதவனை விருப்பு வெறுப்புகள் தொடமாட்டா.

காற்றுக்குச் சரீரம் இல்லை. மேகமும், மின்னலும், இடியும் சரீரம் இல்லாதவை. எங்ஙனம் இவை ஆகாயத்துக்கு மேலே கிளம்பி, உயர்ந்த ஒளியை அடைந்து தமது சுய உருவத்துடன் விளங்கு கின்றனவோ, அப்படியே தெளிவடைந்த இவன், இந்த உடம்பிலிருந்து கிளம்பி பரஞ்சோதியை அடைந்து சுய உருவத்துடன் விளங்குகிறான்.

இவன் உத்தம புருஷன். இவன் அங்கே அநேக வாகன வசதிகளுடன் கூடிச் சிரித்தும், விளையாடியும், மகிழ்ந்தும் உடன் பிறந்த சரீரத்தை நினையாமல் உலவுகிறான்.

வண்டியில் குதிரை பூட்டப் பெற்றிருப்பது போல், இந்த உடம்பில் பிராணன் பூட்டப் பெற்றிருக் கிறது.

—சாந்தோக்கிய உபநிஷதம்

ஆன்மா பிறப்பதுமில்லை; இதற்குச் சாவும் கிடையாது. இது முதலில் தோன்றுவதோ பிறகு மறைவதோ இல்லை. இது பிறவியற்றது; என்றும் இருப்பது; மிகவும் பழையது. உடல் அழிந்த பிறகும் இது அழிவதில்லை.

நமது ஆடை நைந்து கிழிந்து போனதும் அதைக் களைந்து எறிந்து விட்டுப் புதிய ஆடையை எடுத்து அணிவது போல, ஆன்மாவின் ஆடை போன்ற இந்த உடல் மெலிந்து பாழானதும் அது இதை உதறி விட்டுப் புதிய உடல் ஒன்றை ஏற்றுக் கொள்கிறது.

இந்த. ஆன்மாவை எந்த ஆயுதங்களினாலும் வெட்டிச் சிதைக்கவோ, தீயினால் பொசுக்கவோ முடியாது; இதை நீரினால் நனைக்கவும் காற்றினால் உலர்த்தவும் இயலாது.

—பகவத் கீதை

காரணத்துக்கு அந்நியமாய்க் காரியமில்லை. உதாரணம். மண்ணினால் உண்டாக்கப்பெற்ற பானை முதலிய பண்டங்கள், மண்ணுக்கு அந்நியமாக எப்படிக் காணவில்லையோ, நூலினால் நெய்யப் பெற்ற புடவைகள் நூலுக்கு அந்நியமாக எப்படிக் காணவில்லையோ, தங்கத்தால் செய்த ஆபரணங்கள் தங்கத்துக்கு அந்நியமாக எப்படிக் காணவில்லையோ, இரும்பினால் செய்த ஆயுதங்கள் இரும்புக்கு அந்நியமாக எப்படிக் காணவில்லையோ, அதேபோல்

ஆன்மாவினால் உண்டாக்கப் பெற்ற பிரபஞ்சன், ஆன்மாவையன்றி வேறில்லை என்று அறிவது.

—வாசுதேவ மனனம்

களங்கமின்றியே புத்தியினால் ஆராய்ந்து பார். அறிவாய்.

மேகமின்றிய ஆகாயத்தில் சூரியன் மிளிர்வது போல் ஆன்மாவைச் சூட்சுமக் கண்களால்தான் அறிய முடியும்.

எங்கும்-எல்லாவற்றிலும்-எப்பொழுதும் விளங்குகிறது ஆன்மா. ஆதலால் கேவலம் புத்தியின் பிரமாணத்துக்குள் அடங்கியது அன்று ஆன்மா. ஆகவே ஸ்தூல கண்களால் அதனைப் பார்க்க முடியாது.

ஆன்மாவை எனக்குக் காண்பி என்பது எனது கண்களை எனக்குக் காண்பி என்பது போலாகும்.

தனி இடத்து அமர்ந்து, தெளிவுற விசாரித்து, 'என்னுடையது' என்பவை எல்லாம் தள்ளியபின், எதைத் தள்ள முடியவில்லையோ அதுவே ஆன்மா.

—திரிபுர ரகஸ்யம்

காந்தம் தன் எதிர்க்கப்பட்ட இரும்பை இழுப்பது போல, ஈசன் தன்னை நோக்கிய ஆன்மாவைத் தன் வசம் இழுப்பான். —ஞான ரத்நாவளி

ஆன்மா என்பது ஒரு பெரிய சமுத்திரம். கை கால் முதலிய இந்திரியாதிகள் அதில் மிதக்கும் பனிக்குன்றுகள். ஞான சூரியன் உதயமானதும் அவை ஆன்மாவில் கரைந்து நாம ரூபாதிகளை இழக்கின்றன.

—வேதாந்தம்

ஐம்பூதங்களும் எப்படி உண்மையானவையோ, அப்படி ஆன்மாவும் உண்மையானது. –யக்ஞவல்கியர்

தவத்தையும், பொறுமையையும் யார் பொக்கிஷமாகப் போற்றுகின்றனரோ, அவரிடம் ஆன்ம சக்தியாகிற ஊழித் தீயானது மறைந்து கிடக்கும் என்பதையும், அந்த அக்கினி பீறிட்டுக் கிளம்புமாயின், உலகத்தையே சாம்பலாக்கி விடும் என்பதையும் மறக்காதே. –காளிதாசன்

அஹிம்சை, அஞ்சாமை, தியாகம், தயை, கள்ளாமை, வெளவாமை, பிரமசரியம், நன்னடத்தை, ஆகிய இவற்றின் உதவியால் ஆன்மாவை இன்னதென்று உணர்ந்தால், வேறுபாடுகளை விலக்கிக் கொண்டு சமநிலையை எய்திவிடலாம். அப்போது தான் சாந்தி கிட்டும். நிர்வாணம் என்பது சாந்தியே யன்றி வேறன்று. –மகாவீரர்

உடல் முதலிய தொகுதிகளை "நான்" அல்லது "ஆன்மா" எனக் கொள்வது அஞ்ஞானம்.

அருணோதயத்தால் இருளானது முதலில் நீக்கப் பட்ட பின் சூரியன் தானே பிரகாசிப்பது போல், அஞ்ஞானம் ஞானத்தால் நீக்கப்பட்டபின் ஆன்மா தானே பிரகாசிக்கும்.

ஒளி வடிவாயுள்ள சூரியனிடம் எவ்வாறு இருள் இல்லையோ அவ்வாறே அறிவு வடிவான ஆன்மாவில் அஞ்ஞானத்திற்கு இடமில்லை.

வெளிச்சம் குறைந்த இடத்தில் ஒரு பழுதானது பாம்பு எனக் கருதப்படுவது போலும், முத்துச் சிப்பி வெள்ளி எனக் கருதப்படுவது போலும், அஞ்ஞானியால் உடல் ஆன்மா எனக் கருதப்படுகிறது.

ஒருவன் படகில் செல்லும்போது தரையிலுள்ள மரங்கள் படகு செல்லும் திக்கிற்கு எதிராக நகர்வது போல் அவனுக்குப் பிரமை ஏற்படுகிறது.

பிறவிச் சூழலில் ஆன்மா சுழல்வதாய்த் தோன்றுவதும் அப்படிப்பட்ட பிரமையே.

நெருப்பிலிட்ட தங்கம் அழுக்கு நீங்கிப் பிரகாசிக்கும். அதுபோல, கேள்வி முதலியவற்றால் கொழுந்து விட்டு எரியும் ஞானத்தீயில், பரிசுத்தமான ஜீவன் எல்லா மலங்களும் நீங்கித் தன்னுடைய சுய ஒளியுடன் மிளிர்கிறது.

எல்லா ஆசைகளையும் விட்டு ஆன்மாவைக் கண்டு அனுபவிக்க வேண்டும் என்ற தீவிரமான ஆசை மட்டும்தான் ஆன்ம தரிசனத்திற்கு அவசியமான சாதனம்.

–ஆதிசங்கரர்

அறிவாற்றலால் கடவுளை அறிய இயலாது. ஆன்மிக சத்தியால் அவரை உணரலாம்.

எல்லாப் பொருள்களிடத்தும் ஆன்மாவைக் காண்பாயாக.

எதற்கும் அஞ்சாதே;

எதையும் வெறுக்காதே;

யாரையும் ஒதுக்காதே;

உன் பணியைத் தைரியமாகச் செய். –அரவிந்தர்

உலகத்திலுள்ள எல்லாச் சக்திகளையும் விட ஆன்ம சக்தியே அதிகப் பலமுள்ளதாகும். –காந்தியடிகள்

ஆன்மிக செல்வம் மனிதனின் வனத்தைப் பொலிவுற செய்கிறது; பரிவு, பண்பாடு இவற்றைத் தோற்றுவிக்கிறது.

விழியின் ஒவ்வோர் அசைவிலும் நௌிவிலுமே ஒவ்வொரு ஜீவனிடத்தும் உள்ள ஆன்ம சக்தி வெளிப் பட்டு இயங்குகிறது.

நமது தோற்றம், நமது சொற்கள், நமது செயல்கள் யாவும் நம்மை விட எதுவுமே உயர்ந்ததில்லை. ஏனெனில், நமது ஆன்மாவே நமது இல்லம். நமது கண்களே அதன் சாளரங்கள். நமது சொற்களே அதன் தூதர்கள். —கலீல் கிப்ரான்

உடலைக் கொண்டு வாழ வேண்டாம். அது மண்ணும் தண்ணீரும் கலந்த களிமண்ணால் செய்யப் பெற்றதாகும். அது நிலைக்காது. ஆன்மாவைக் கொண்டு வாழ்பவரே எக்காலமும் நிலைத்திருக்க முடியும். —அமீர் குஸ்ரு

ஆன்மாவைக் கொல்ல முடியாமல் உடலைக் கொல்பவருக்கு அஞ்சாதே. ஆன்மாவையும் உடலையும் கொல்பவருக்கே அஞ்சு. —இயேசு கிறிஸ்து

நடந்து போனதைப் பற்றிய துயரமும் வரப் போவதைப் பற்றிய கவலையும் விட்டு, நிகழும் காரியங்களில் மனம், திடபுத்தி, தயை இவற்றை அறிவுடன் செலுத்தி, அறநெறி வழுவாது வாழ்க்கை நடத்து.

அக்கினி தனக்குள் விழும் பொருள்களை உப யோகித்து அவற்றின் பலத்தைக் கொண்டு முன்னிலும் உயரமாகக் கிளம்புகிறது. அதே போல் ஆன்மாவும்

தனக்குத் தடையாய் உள்ளவற்றையே தன் வளர்ச்சிக்குச் சாதனங்களாக்கிக் கொள்கிறது.

—மார்கஸ் ஔரேலியஸ்

ஆன்மா அமரன். அவனை எவராலும் கொல்லவோ அழிக்கவோ முடியாது. —சாக்ரட்டீஸ்

ஆன்மா எப்போதும் பரிசுத்தமாக இருக்கிறது பனித்துளியைப் போல.

ஆன்மாவின் வழி நடந்தால் அதுவே கடவுளின் வழி. —மாக்ஸிம் கார்க்கி

ஆன்மா சூரியனை ஒக்கும். இரவில் புலனாவ தில்லை. ஆனால் வேறிடத்தில் வெளிச்சம் பரப்பு வதற்காகவே சென்றுள்ளது என்பதே உண்மை.

ஆன்மா என்றும் அழியாதது என்னும் நம்பிக்கை யுடையவன் நான். சூரியன் நம்முடைய ஊனக் கண்களுக்கு மறைவது போல் தோன்றினாலும் அது உண்மையில் மறைவதேயில்லை. எப்பொழுதும் ஒளிர்ந்து கொண்டேயிருக்கிறது. அதுபோன்றதே ஆன்மா. —கதே

மிக ஆழ்ந்து அழகு நிறைந்த அனுபவத்தை மனிதனுக்குத் தரக்கூடியது, பிரபஞ்ச ரகசியத்தைப் பற்றிய ஆன்ம பரவசமே. உண்மையான சகல விஞ்ஞான வளர்ச்சிக்கும் விதை அதுவே.

அதிசயமும் பிரமிப்பும் அடைந்து நிற்கச் செய்யும் இந்த ஆன்ம பரவசம் இல்லாதவன் பிணத்துக்குச் சமானமானவனே. —ஐன்ஸ்டீன்

அன்பும் நம்பிக்கையுமே ஆன்மாவின் தாய்ப்பால். அன்பும் நம்பிக்கையும் பெறாவிடில் ஆற்றல் முழுவதும் அழிந்து போகும்.

உழைப்பை மட்டும் விற்கலாம். ஒரு நாளும் ஆன்மாவை விற்கலாகாது. –ரஸ்கின்

ஆன்மசக்தி வளர வளர, மனச் சிறப்பு மின்ன மின்ன, உடல் வளம் குன்றி வருகிறது. மிருகத் தன்மை மறைகிறது. –எமர்ஸன்

செடியின் முட்டில் மண்ணை அணைத்து வை. ஆனால் மலருக்குள் விழுந்து விடாமல் பார்த்துக் கொள். உலக விஷயங்களைக் கற்றுக் கொள். ஆனால் அவற்றில் ஆன்மாவைப் பறிகொடுத்துவிடாதே. –ரிக்டர்

நமது செயலின் விளைவுகளை நாம் ஏற்றுக் கொள்ளும் முறையே நமது ஆன்மாவின் உயர்வை அளக்கும் கோலாகும். –மார்லி

ஆனந்தம் என்பது பெருங் கூட்டங்களிடையே இல்லை; அல்லது பொன்னிலே, பொருளிலே இல்லை. அது ஆன்மாவிடத்திலேயே வசிக்கிறது. –ஹெராகிளிடஸ்

ஒருவன் தன் ஆன்மாவைப் பறிகொடுத்துவிட்டு உலகம் முழுவதையுமே லாபமாகப் பெற்றாலும் பயனில்லை. –ஆஸ்கார் ஒயில்டு

அறிவு கண்ணில் விளங்கும். அன்பு முகத்தில் விளங்கும். ஆனால் ஆன்மா விளங்குவது மனத்தில் கேட்கும் அந்தச் சிறுகுரலிலேயே. –லாங்பெலோ

பயபக்தியில்லாத அறிவு அறிவாகாது. அது மூளை விருத்தியாய் இருக்கலாம். அல்லது கைத்

தொழில் அறிவாயிருக்கலாம். ஆனால் ஆன்ம அபிவிருத்தியாக மட்டும் இருக்காது. –கார்லைல்

அலை மோதும் ஆழ்கடலை விட அதிகமாக விரிந்தது வானவெளி. ஆனால் அந்த வானத்தையும் விட விரிந்துள்ளது ஆன்மா. –விக்டர் ஹ்யூகோ

ஆன்மாவைப் பற்றிய முக்கிய பிரச்னை அது எங்கிருந்து வந்தது என்பதன்று, அது எங்கே போகிறது என்பதே ஆகும். அதை அறிய வாழ் நாள் முழுவதும் தேவை. –சான்றோர்

மாயை

மாயை (பாசம்) என்பதற்கும் தயை (இரக்க குணம்) என்பதற்கும் உள்ள வேற்றுமை; பெற்றோர், உடன் பிறந்தோர், மனைவி, மக்கள், மருமக்கள் முதலிய சுற்றத்தார், மற்றுமுள்ள சிநேகிதர்கள் இவர்களிடம் ஒருவனுக்கு இருக்கும். பந்தமும் அன்புமே மாயை எனப்படும்; எல்லா ஜீவர்களிடமும் சமமாய்க் காட்டப்படும் அன்பு, தயை எனப்படும். ஈசுவரன் சர்வாந்தர்யாமி என்ற ஞானத்திலிருந்தே இந்தத் தயை உண்டாகிறது.

மாயை இரு வகைப்படும்: ஒன்று வித்யாமாயை அது நம்மை ஈசுவரனிடம் அழைத்துச் செல்வது. மற்றொன்று அவித்யா மாயை; அது நம்மை ஈசுவரனிடமிருந்து பிரிப்பது. வித்தை (வித்யா) விவேகம், வைராக்கியம் என இருவகைப்படும். அவித்தை காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், பொறாமை என அறுவகைப்படும். இந்த மாயையே 'யான்' 'எனது' என்னும் உணர்ச்சியை உண்டு

பண்ணுகிறது. இதுவே நம்மை இப்பொய்யுலகில் பந்தப்படுத்தும் சங்கிலி போன்றது. ஆனால், வித்தை தோன்றும்போது அவித்தை அடியோடு நாசமடைகின்றது.

கலங்கியுள்ள நீரில் சந்திர சூரியர்களுடைய பிரதிபிம்பத்தைத் தெளிவாய்க் காண முடியாது. அது போல் 'யான்' 'எனது' என்னும் மாயையால் கலங்கியிருக்கும் புத்தியிலும் ஈசுவரனுடைய அருட் பிரகாசத்தைச் சரியாய் உணர முடியாது.

உலகனைத்துக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியனை நாம் காண முடியாதபடி சிறு மோகமானது மறைக்கின்றது. அதுபோல ஸர்வாந்தர்மியாயும், ஸர்வ ஸாக்ஷிபூதனாயும் விளங்கும் சச்சிதானந்தப் பரம் பொருளை நாம் பார்க்காதபடி துச்சமான மாயையாகிய திரை மறைக்கின்றது. –இராமகிருஷ்ணர்

உலக மாயை பல வர்ண ஜாலக் கண்ணாடி. ஞான ஒளி பெற்ற உண்மையின் ஜோதியைத் தடுத்துக் கெடுக்கிறது. –ஷெல்லி

அகண்டத்தில் பிரமா, விஷ்ணு, சிவன் என்னும் பேதத்தையும் உண்டு பண்ணி, புத்திமான்களையும் விஷ்ணு, சிவன் என்னும் பேதத் தன்மைகளைக் கொள்ளும்படியாக மாயை மயங்குகின்றது. ஆகையால் நிகழாததை நிகழச் செய்வதில் வல்லது மாயை. –மாயா பஞ்சகம்

சேராததை முடித்து வைப்பது எதுவோ, அது தான் மாயை.

எது இன்னதென்று சொல்ல முடியாதோ அது தான் மாயை. –வடமொழி சுலோகம்

சம்சார மாயை என்ற தூக்கத்தினின்று விழிப்பது எளிதன்று. அதற்கு, விடுபட வேண்டும். என்ற விருப்பம் உள்ளத்தில் பொங்க வேண்டும். அன்றியும் கத்தி முனைமேல் நடப்பது போல், இடைவிடாத ஜாக்கிரதையுடன் புலன்களையும், மனத்தையும் மாசற நிறுத்தி, வேற்றுமை உணர்ச்சியை அறவே நீக்க வேண்டும்.

–உபநிஷதம்

செப்பிடு வித்தைக்காரனுடைய ஜாலங்கள் அவனை மயக்காது. பிறரை மயக்கும். அதுபோல, யோக மாயையானது பகவானை மயக்காது. பிறரையே மயக்கும்.

–ஆதிசங்கரர்

குருடன் வழியில் இருக்கும் வைக்கோல் துரும்பை மிதித்தாலும் பீதி கொள்கிறான். அதுபோல் மாயையால் கட்டுண்டவர்கள் ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் கண்டு பயமடைகிறார்கள்.

–ஞானதரிசினி

□ □ □